பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 30 வெள்ளிக்கிழமை (14.03.2003) தொலைபேசி- 2223378 ஒலி 85

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## கடற்படை சரியாக நடந்துள்ளது

# கப்பல் தாக்கப்பட்டது

# யுத்த நிறுத்த மீறல் அல்ல

## அமைச்சர் பீரிஸ் பகிரங்க அறிவிப்பு

## சமாதானத்தைப் பாதிக்காது என்றும் தெரிவிப்பு



(நமது நிருபர்)

**முல்லைத் தீவு கடற் பகுதியில் விடுதலைப் புலிகளின் கப்பல் மீது இலங்கைக் கடற் படையினர் நடத்திய தாக்குதல் சம்பவம் ஆனது அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் சம்பவம் அல்ல என்றும் நாட்டின் இறைமைக்கு ஆபத்து ஏற்படும் போது முப்படையினரும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும் என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று நடை பெற்ற இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

முல்லைததீவு கடற்பகுதியில் கடந்த திங்கட்கிழமை புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தால் சமாதானப பேச்சுவார்த்தைகளுக்கு குந்தகம் ஏற்பட மாட்டாது. கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்களே ஒழிய யப்பானில் நடை பெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையை பிற்போடுமாறு (10ம் பக்கம் பார்க்க)

## களுத்துறை உண்ணாவிரதக் கைதி ஒருவர் நேற்று விடுதலை

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளின் உண்ணா விரதம் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவர்களில் ஒருவருக்கு எதிராக நடை பெற்றுக் கொண்டிருந்த வழக்கின் குற்றப்பத்திரம் சட்டமா அதிபரினால் வாபஸ் பெறப்பட்டதை அடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

நேற்று வெலிக்கடை விஷேட நீதி மன்றத்தில் இடம் பெற்ற விசாரணையின் போதே நீதிபதி சுனில் ராஜபக்ஷ அந்த நபரை விடுதலை செயது தீர்ப்பு வழங்கினார். மட்டக்களப்பைச் சேர்ந்த சாமித்தம்பி நேமநாதன் என்பரே விடுதலை செய்யப்பட்டவராவர். வழக்கைத் தாம் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்றும் குற்றச் சாட்டுப் பத்திரத்தை வாபஸ் பெற விரும்புவதாகவும் அரச சட்டவாதி எம்.நவாவி தெரிவித்துள்ளார். (த)

## சமாதானப் பேச்சில் பங்கு பற்றும் முடிவை பிரபாவே எடுப்பார்!

## ஹெல்கீஸனிடம் பாலா தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யப்பானில் எதிர்வரும் 18ம்திகதி ஆரம்பமாகும் சமாதானப் பேச்சுக் களில் விடுதலைப் புலிகள் பங்கு பற்றுவார்களா இல்லையா என்பது இன்னும் சில தினங்களில் தெரிய வரும் எனினும் இப் பேச்சுவார்த் தைகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார் நேற்றைய தினம் கிளிநொச்சி சமாதான செயலகத்தில் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸனும் ஆலோசகர் அன்ரன பாலசிங்கமும் சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கப்பட்டமை உட்பட எதிர் காலத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்தனர்.

முறபகல் 11.30மணிக்கு ஆரம்பமான இக் கலந்துரையாடல் தொடர்பாக அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவிக்கையில்:

யப்பானில் நடை பெறும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது தொடர்பாக கண்காணிப்புக் குழு நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் ஆகியோருடன் நடை பெற்ற கலந் துரையாடல் தொடர்பாக தலைவர் (10ம் பக்கம் பார்க்க)

## சாகுல் ஹமீட் சென்னையில் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து சென்னையில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்த "தமிழ் முழக்கம்" பத்திரிகையின் வெளியீட்டாளர் சாகுல் ஹமீட் பொடா சட்டத்தின் கீழ் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (வ)

## அல்லப்பிட்டி சோதனைச் சாவடி முன்பாக இன்று மறியல்

(வேலணை)

கடற்படையினரின் அராஜகத்தைக் கண்டித்தும் சோதனைச் சாவடிகளில் இடம் பெறும் கெடுபிடிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் இன்று அல்லப்பிட்டி சோதனைச் சாவடி முன்பாக மறியல் போராட்டம் ஒன்று இடம் பெறவுள்ளது.

தீவக மக்கள் நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் காலை 8மணிக்கு இடம் பெறவுள்ள இப் போராட்டத்தில் தீவகத்தின் அனைத்துப் பிரதேசங்களையும் சேர்ந்த அரச,தனியார் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் ஈடுபடுவார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## முஸ்லிம்களின் "தனித்தரப்புக்கு" ஜனாதிபதி சந்திரிகா ஆதரவு

## முஸ்லிம் எம்.பி.க்களிடம் உறுதி

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடை பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் மக்களின் சார்பில் தனித் தரப்பாகக் கலந்த கொள்ளும் விடயத்தில் தன்னுடைய ஆதரவும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவுமுண்டு என்று தன்னைச் சந்தித்த முஸ்லிம் பாராளுமன்றக் குழுவிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உறுதியளித்துள்ளார்.

முஸலிம் பாராளுமன்றக் குழுவின சார்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்,வன்னி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் நூராடீன் மசூர்,தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் திருமதி பேரியல் அஷ்ரப் ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.இப் பேச்சுவார்த்தையின் போதே ஜனாதிபதி மேற்கண்ட உறுதி மொழியை அளித்துள்ளார். (வ)

## வடமராட்சி வ. ச. தலைவரை படையினர் மிரட்டினர்!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கடற்பரப்பில் கடற்படையினரின் வலிந்த தாக்குதலினால் வீரச்சாவடைந்த பதினொரு போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் வடமராட்சிப் பகுதியில் கொடிகள் கட்டி சோடினையில் ஈடுபட்ட வடமராட்சி வர்த்தக சங்கத் தலைவரை படையினரின் புலனாய்வுப் பிரிவினர் மிரட்டி எச்சரிக்கை செய்ததாக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் புலிகளின் செயற்பாடுகள் நடமாட்டங்கள் குறித்து தீவிரமாகத் துப்புத் துலக்கிவரும் (10ம் பக்கம் பார்க்க)

## சண்டையை ஆரம்பிக்கவுள்ளோம் புலிகளிடம் படையினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முகாமாலைச் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த படையினர் நேற்று வன்னிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த போராளிகள் சிலரை எச்சரித்ததாக புலிகள் தரப்பில் இருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசியல் பணிகளை மேற் கொள்ளும் வகையல் ய்ாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த போராளிகள் சிலரை படையினர் சோதனைச் சாவடியில் தடுத்து வைத்து சோதனைகுட்படுத்தியதுடன், தாங்கள் சண்டையை ஆரம்பிககப் போவதாகவும், வீணாக யாழ்ப்பாணம் சென்று மாட்டிக் கொள்ளாதீர் கள் என்று கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொறுமையுடன் போர் நிறுத்தப் (10ம் பக்கம் பார்க்க)




# CRICKET WORLD CUP 2003




## இலங்கையுடன் மீண்டும் மோத விரும்புகிறார் கங்குலி

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் இன்றைய சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் நியூசிலாந்து அணியை வெற்றி கொள்வதே எமது நோக்கம் என இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய போட்டியில் நியூசிலாந்து அணியை நாங்கள் வீழ்த்தினால் இலங்கை அணி அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும். அப்படி அவர்கள் தகுதி பெற்றால் போர்ட் எலிசபெத் மைதானத்தில் அவுஸ்திரேலியாவை எதிர்த்து விளையாட வேண்டியிருக்கும். அந்த ஆடுகளம் சுழல் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளம். இதனால் கள நிலைவரம் அவர்களுக்குச் சாதகமாக இருக்கும்

இலங்கை அணி அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தினால் இந்திய, இலங்கை அணிகள் இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பு ஏற்படும்

ஆனால் இப்படிப்பட்ட சாத்தியக் கூறு இலகுவான காரியமல்ல. இந்தியா, நியூசிலாந்து அணியை வீழ்த்துவதை விட நாளை நடைபெறவுள்ள சிம்பாப்வே அணியுடனான போட்டியில் இலங்கை அணி வெற்றிபெறுவதே மிக முக்கியம். இந்த இரண்டும் நடைபெற்றாலேயே இலங்கை அணியும், அவுஸ்திரேலிய அணியும் அரையிறுதிப் போட்டியில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும் என்று கங்குலி மேலும் தெரிவித்தார்

## வென்றால் மூன்று கோடி

2003ம் ஆண்டிற்கான உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலியா கைப்பற்றினால் அணித் தலைவர் றிக்கிபொண்டிங், வேகப் பந்துவீச்சாளர் கிளென் மக்ராத் மற்றும் இலக்குக் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ற் ஆகியோர் தலா 3 கோடி ரூபாவை (அவுஸ்திரேலிய டொலரில் 10 இலட்சம்) இந்த ஆண்டுக்கான ஊதியமாகப் பெறுவார்கள் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியத்தின் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள மக்ரத்துக்கு 4லட்சத்து 40ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் அடிப்படை ஊதியமாக வழங்கப்படுகின்றது. கில்கிறிஸ்ட்டும், பொண்டிங்கும் 3லட்சத்து 60 ஆயிரம் முதல் 4 இலட்சத்து 20 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் வரையில் அடிப்படை ஊதியம் பெறுகின்றனர்.

உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி வென்றால் சுமார் 3 லட்சம் அவுஸ்திரேலிய டொலர்கள் கிடைக்கும். உலகில் முதன் முறையாக 3 கோடி ஊதியமாகப் பெறவுள்ள கிரிக்கெட் வீரர்கள் அவுஸ்திரேலிய வீரர்களே என்பது குறிப்பிடத் தக்கது. (த-55)

### ஹர்பஜனுடன் நெருங்குகிறார் கங்குலி

உலகக் கிண்ண கிரிக்கெட்-அரையிறுதிக்கு முன்னேறியிருக்கும் இந்திய அணி தனது கடைசிச் சூப்பர் சிக்ஸ் மோதலில் நியூசிலாந்தை இன்று எதிர்கொள்ள காத்திருக்கிறது. உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மனோதத்துவ நிபுணர் ஒருவர் இந்திய அணிக்கு நியமிக்கப்பட்டார். இவர் வீரர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகச் சந்தித்து அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்

இந்த உலகக் கிண்ண கிரிக்கெட் சபையின் புதிய அணுகுமுறைக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. தொடக்கத்தில் தடுமாறிய கங்குலி இதுவரை 2 சதங்கள் அடித்துள்ளார். நமீபியாவுக்கு எதிரான ஆட்டத்தின் போது ஹர்பஜன் தனக்கென எடுத்து வந்திருந்த ஷ"வை கங்குலி அணிந்து சென்றார். சதம் அடித்த தெம்பில் வந்த கங்குலி அதே ஷ"வுடன்தான் கென்யாவுக்கு எதிராகவும் சதம் எடுத்து இருக்கிறார்.

கடந்த 2001ம் ஆண்டு இங்கிலாந்து பயணத்தின் போது இப்படித்தான் ஹர்பஜன் எடுத்துவரும் ஷ"வை அணிந்து சென்று துடுப்பாட்டத்தில் சாதித்து இருக்கிறார். இதனால் ஹர்பஜன் தற்போது கங்குலியின் நெருங்கிய நண்பராக இருக்கிறார். கங்குலி எப்போதும் தனது அம்மாவின் பேச்சைத் தட்டுவது கிடையாது. துடுப்பாட்டத்தின் போது 24 என்ற பனியன் எண்ணுடன் கங்குலி களம் இறங்குவது அவரின் அம்மா கொடுத்த அட்வைஸ் ஆகும் (த)

## இலங்கைக்கு உதவுமா இந்தியா?

உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் டார்பனில் எதிர்வரும் 20ம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கென்யாவை எதிர்த்து இந்தியா ஆடுவது உறுதியாகி விட்டது. இந்நிலையில் இன்று சுப்பர் சிக்ஸ் ஆட்டமொன்றில் இந்தியாவை எதிர்த்து நியூசிலாந்து அணி ஆடவுள்ளது. இவ்வாட்டத்தில் நியூசிலாந்து அணி வென்றால் இலங்கையின் பாடு அதோ கதிதான். இந்திய அணி வெல்லும் பட்சத்தில், சிம்பாவே அணியுடனான ஆட்டத்தில் இலங்கை அணி வென்றால் அவுஸ்திரேலிய அணியை அரையிறுதியில் சந்திக்க முடியும்.

தற்சமயம் நியூசிலாந்து 8 புள்ளிகளுடனும், இலங்கை 7.5 புள்ளிகளுடனும் சிம்பாப்வே 3.5 புள்ளிகளுடனும் உள்ளன.

இந் நிலையில் 4வது இடத்தைக் கைப்பற்றி அரை இறுதிக்கு தகுதி பெறப் போவது இலங்கையா? நியூசிலாந்தா, என்ற ஆவல் ரசிகர்களிடையே மேலோங்கியுள்ளது.

இது ஒரு புறமிருக்க கென்ய அணி எதிர்வரும் 15ம் திகதி அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியில் ''குருட்டுப் பூனை விட்டத்தில் பாய்ந்த கதையாக'' வெற்றி பெற்றால் இந்தியா 3வது இடத்துக்கு தள்ளப்படும். ஆயினும் 2வது, 3வது இடங்களைப் பிடிக்கும் அணிகளே அரை-இறுதியில் மோதுவதால் இந்திய-கென்யா ஆட்டம் உறுதியாகி விட்டது. (த-55)

## ஆடுகளமும் சதி செய்கிறதா? ஆராய்கிறது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபேத்தில் உள்ள செயின்ட் ஜார்ஜ் ஆடுகளத்தின் தன்மை குறித்து ஆராய உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான ஏற்பாட்டுக் குழு தீர்மானித்துள்ளது. இம் மைதானத்தில் ஆரம்பத்தில் வீசப்படும் பந்துகள் எதிர்பாராமல் மேல் எழுந்து துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையச் செய்கின்றது. இதனை அடுத்து எதிர்வரும் 18ம் திகதி செவ்வாய் கிழமை இம் மைதானத்தில் நடைபெறவுள்ள முதல் அரையிறுதி ஆட்டத்தில் விளையாடும் அணிகள் பாதிக்கப்படும் என்ற அச்சத்தால் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

ஏற்கனவே தென்னாபிரிக்கா இச்சுற்றுப் போட்டியிலிருந்து வெளியேறியதால் மக்களின் ஆர்வம் வெகுவாக குறைந்துள்ளது. இந் நிலையில், ஆடுகளமும் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இல்லையெனில் பார்வையாளர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடும் என்பதாலும் ஆடுகளத்தைச் சோதனை செய்ய தென்னாபிரிக்கா ஆடுகளச் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.

தென்னாபிரிக்க ஆடுகளச் சங்கத் தலைவர் ஹில்பர்ட் ஸ்மிட், கிரிக்கெட் இயக்கத்தின் இயக்குநர் பிரையன் பேஸ்ஸான் ஆகியோர் மேற்படி மைதானத்தை ஆராய உள்ளனர். (த-55)

## குதூகலிக்கிறது கென்யா

ரெஸ்ற் அந்தஸ்துப் பெறாத கென்ய அணி, சிம்பாப்வே அணியுடனான சுப்பர்சிக்ஸ் ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றியீட்டியதன் மூலம் இம்முறை உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டிக்குத் தெரிவுபெற்றுள்ளது. முதன் முறையாக உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றமையால் கென்ய அணி எல்லையில்லா மகிழ்ச்சியில் திளைக்கின்றது என அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் சண்டீப் பட்டேல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எமது அணி வீரர்கள் இம்முறை உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் தமது திறமையைக் கிரிக்கெட் உலகுக்கு வெளிக் காட்டியுள்ளனர். இலங்கை மற்றும் சிம்பாப்வே அணிகளுடனான போட்டியில் நாம் பெற்ற வெற்றிகள் மகத்தானவை என்றார். இனிமேலும் சாதிக்க வேண்டிய சாதனைகள் பல இருக்கின்றன. அவற்றையும் சாதிக்க வேண்டும். அடுத்துவரும் போட்டிகள் எமக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்பார்ப்பதாகக் கூறினார்

இந்திய அணியை மீண்டும் ஒரு முறை இவ் உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் சந்திக்க வேண்டி உள்ளது. முதலில் ஆடிய ஆட்டத்தில் அவர்களுக்கு பெரும் அழுத்தம் கொடுத்தே தோற்றோம். அவ்வாறே இம் முறையும் ஆடுவோம். சச்சின் விரைவாக ஆட்டமிழந்தால் எமது வெற்றி உறுதியாகும் என்றார் முன்னாள் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரும், தற்போது கென்ய அணியின் பயிற்றுநருமான சண்டீப் பட்டேல். (த-55)

### இன்றைய ஆட்டம்

நியூசிலாந்து
எதிர்
இந்தியா
(செஞ்சூரியன்)
2.00 P.M

இ.ச. பேரம்பலம் சக நிறுவனத்துடன்
இணைந்து
வலம்புரி
நாடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப் போட்டி
போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்
1.இம் முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
2.இப் போட்டியின் சகல துறை ஆட்டக்காரர் யார்?
உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
வலம்புரி
இல, 15 வெள்ளாந் தெரு
யாழ்ப்பாணம்


உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ..................
முகவரி : ..................
தே.அ.அ.இல : ..................
கையொப்பம்: ..................
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# வடக்கின் மாபெரும் கிரிக்கெட் மோதல் களத்தில் சென்றல்-சென்.ஜோன்ஸ் அணிகள்



யாழ். மத்திய கல்லூரி

அமர்ந்திருப்போர் : (இ-வலமாக ) திரு. வீ.எஸ். மகேந்திரன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), ஆர்.மதுசன் (உபதலைவர்), வீ. றஜீவ்குமார் (அணித்தலைவர்), திரு. கே. இராசதுரை (அதிபர்), எஸ். கார்த்தீபன், திரு. எஸ். காண்டீபன் (பயிற்றுநர்), திரு. ஈ.எவ். ஆர். ஜெயக்குமார் (பொறுப்பாசிரியர்)
நிற்போர் : (இ-வலமாக) 1வது வரிசை : கே. கார்த்திக், எஸ். துஷாந்தன், ரி. தினேஷ், எஸ்.விமலகாந், ஆர். சிவகுமார், ஏ. டியூறன், கே. றொகான், ஏ. ஜசிந்தன்.
2வது வரிசை : வ. கபில்தேவ், எம். ஜசோதரன், பி. கஜன், கே. கலிஸ்ரன், எஸ். வாகீஷன், எஸ்.சுரேஷ்ராஜா



சென். ஜோன்ஸ் கல்லூரி

அமர்ந்திருப்போர் : (இ-வலமாக ) திரு. கே.எஸ். முகுந்தன் (பொறுப்பாசிரியர், பயிற்றுநர்), பீ.லவேந்திரா, சீ.அகிலன் (அணித்தலைவர்), திரு.எஸ். தனபாலன் (அதிபர்), ஈ.எஸ். வில்சன் (உபதலைவர்), ஏ. தனஞ்சயன், வி.எஸ்.பீ. துஷிதரன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்)
நிற்போர் : (இ-வலமாக) 1வது வரிசை : ரி. மதன்றாஜ், ரி.சீ. அன்று, ஆர். பிரகதீசன், எம்.மயூரன், எஸ். கிருஸ்ணகுமார், எஸ். றாஜீவன்
2வது வரிசை : சீ. எம். டினேஷ், வீ. சஞ்சேயன், எஸ். சுதன், ஏ. அன்புஜன், பீ.சகிந்தன்

வடபகுதிப் பாடசாலைகளின் 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் அணிகளிடையே நடைபெறும் போட்டிகளில் மிகப் பெரிய போட்டியாக கருதப்படும் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் மற்றும யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான 97வது "வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்" (Battle of the North) இன்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது. மேற்படி பாரமபரிய போட்டி 1904ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டு தோறும் இடம் பெற்று வருவது தெரிந்ததே. இவ்வாட்டமானது இன்று 14ஆம் திகதி வெள்ளிக் கிழமையும், நாளை 15ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை நடைபெற உள்ளது.

வடக்கின் மாபெரும் துடுப்பாட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சென்.ஜோன்ஸ் கல்லூரி முன்னாள வீரரும் தற்போதைய அதிபருமான திரு.எஸ். தனபாலன் மற்றும் யாழ். மத்திய கல்லூரி அதிபா திரு.கே. இராசதுரை ஆகியோர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 32 போட்டிகளிலும், யாழ். மத்திய கல்லூரி அணி 22 போடடிகளிலும் வெற்றியீட்டி உள்ளது. 31 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்துள்ளன. போர்ச் சூழல் காரணமாகவும் வேறு சில காரணங்களினாலும் மிகுதியான 8 போட்டிகளுக்குரிய முடிவுகள் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை நாளை முடிவடையும் வடக்கின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டியின் முடிவில் ஒவ்வொரு துறையிலும் சிறந்த வீரருக்கான பரிசுகளும், ஆட்டநாயகன், சகலதுறை ஆட்டக்காரர் மற்றும் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர் போன்ற விருதுகள் தென்னிலங்கை தனியார் கம்பனிகளால் வழங்கப் பட இருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இவ் வருடம் நடை பெற்ற பாடசலை மட்டத்திலான போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி விளையாடிய அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது. யூனியன் கல்லூரி, மகா ஜனக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், மானிப் பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டிகளில் இனிங்ஸ் வெற்றியும்,கொக்குவில் இந்துக் கல்லூரி உடனான போட்டியில் 10 இலக்குகளாலும், சென் பற்றிக்ஸ் கல்லூரி உடனான போட்டியில் 3 இலக்குகளாலும் வெற்றி பெற்றுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியைப் பொறுத்த வரையில் விளையாடிய அனைத்துப் யோட்டிகளும் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்திருக்கின்றன.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் அணித்தலைவராக திகழும் சீ. அகிலன் ஒரு சகல துறை ஆட்டக்காரராவார். மின்னல் வேகத்தில் பந்து வீசும திறனுடையவர். யாழ். மாவட்டத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய வேகப்பந்து வீச்சாளர் வரிசையில் இவரும் ஒருவர். வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளரான இவர் அதிரடியாக துடுப்பெடுத்தாடும திறன் படைத்தவர். கடந்த ஆண்டு அணியின் உபதலைவராக வடக்கின் மாபெரும் துடுப்பாட்டததில் பங்கேற்ற இவர் சிறந்தகளத்தடுப்பாளராக தெரிவு செய்யப்பட்டவர். கடந்த 3 ஆண்டுகளாக கல்லூரி அணியில் ஆடிய அனுபவம் மிக்க சிரேஷ்ட வீரராவார். இவ்வாண்டுக்கான அதிகூடிய ஓட்டமாக கனகரததினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கெதிரான போட்டியில் 77 ஓட்டங்கைளப் பெற்றிருக்கிறார். இச்சுற்றுப் போட்டியில் 30 க்கும் அதிகமான இலக்குகளை சாய்த்த பெருமையுடையவர். எந்தவொரு இக்கட்டான நிலையிலும் அணியை வழிநடத்தக் கூடிய சிறந்த தலைவராவார்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் கடந்த ஆண்டு அணித்தலைவரும், தற்போது அணி வீரனுமான பீ. லவேந்திரா சிறந்த சகல துறை ஆட்டவீரராவார். தன்னந தனியாக அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லக்கூடிய வீரர். இவ்வாண்டுச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரான போட்டிகளில் சதத்தையும், மகாஜனக் கல்லூரிக்கெதிரான போட்டியில் அரைச்சதத்தையும் பூர்த்தி செய்த துடுப்பாட்ட வீரர். யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியின் வீரரான இவர், கடந்த ஆண்டே யாழ். மாவட்ட 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிக்கு தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு நாம் தோற்றாலும் கூட "தோல்வி தான் வெற்றிக்கு முதல்படி" எனும் அமுதவாக்கை நினைத்த படியே இம்முறை ஆட்டத்தில் சாதிப்போம் என்றார். கடந்த ஆண்டு பாட்டா - ஒப்சேவர் (Bata-observer) நிறுவனத்தால் வழங்கப்பட்ட "வடக்கின் சிறந்த கிரிக்கெட் பாடசாலை வீரன்" எனும் விருதை தட்டிச் சென்றார். மேற்படி போட்டியில் 2002இல் சகலதுறை ஆட்டக்காரருக்கான விருதையும், 2001இல் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசையும் 2000இல் சிறந்த பந்து வீச்சாளருக்கான பரிசையும் லவேந்திரா தட்டிச் சென்றார். சிரேஷ்ட வீரரான ஏ. தனஞ்சயன் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு எதிராக "ஹட்றிக்" சாதனையொன்றை மேற்கொண்டுள்ளார். இச்சுற்றுப் போட்டியில் 35க்கும் அதிகமான இலக்குகளை சாய்த்த வலதுகை சுழல் பந்து வீச்சாளராவார்.

**தொகுப்பு: பிரதாப்**

யாழ். மத்திய கல்லூரி அணியின் தலைவராகத் திகழும் வீ. றஜீவ் குமார் சிறந்த சகலதுறை ஆட்ட வீரராவார். இடதுகைத்துடுப்பாட்டவீரரான இவர் 3 அரைச்சதங்களை இச்சுற்றப்போட்டியில் பூர்த்தி செய்துள்ளார். 24 இலக்குகளையும் மொத்தமாக கைப்பற்றியுள்ளார். கடந்த 4 ஆண்டுகளாக கல்லூரி அணியில் இடம்பெற்றமையால் அதிக அனுபவத்துடன் அணித்தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னாள் அணித்தலைவர் எஸ். கார்த்தீபன் தற்போது அணியில் சாதாரணவீரராக ஆடுகிறார். இச்சுற்றுப் போட்டியில யூனியன் கல்லூரிக்கு எதிரான போட்டியில் ஒரு சதத்தைப் பூர்த்தி செய்த பெருமைக்குரியவர். கடந்த ஆண்டு யாழ். மத்திய கல்லூரி அணியை வெல்ல வைத்த பெருமைககுரிய தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட வீரரான கே. றொகான தனது வழமையான பாணியில் இம்முறையும் ஹாட்லிக் கல்லூரிக்கெதிராக ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்கள் மற்றும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துடனான போட்டியில் 92 ஓட்டங்களையும் பெற்றிருக்கிறார். கடந்த ஆண்டு சிறந்த துடுப்பாட்டவீரர் மற்றும் அதிக ஓட்டங்களைப் பெற்ற் வீரர் ஆகிய பரிசுகளை தட்டிச் சென்ற கே. கார்த்திக், ஆட்டநாயகனாக தெரியப்பட்ட எஸ். விமலகாந், சிறந்த பந்துவீச்சாளராக தெரிவு செய்யப்பட்ட ஆர். சிவகுமார் ஆகியோர் தொடர்ந்து அணியில நிலைத்திருப்பது அணிக்கு பலமாக இருக்கும்.

இதுவரை இடம்பெற்று முடிந்த போட்டிகளின் அடிப்படையில், துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரை 1990ம் ஆண்டு சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சுரேன்குமார் பெற்ற 145 ஓட்டங்களே தனிப்பட்ட வீரரால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக காணப்படுகிறது. பந்து வீச்சில் 1940ம் ஆண்டில் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஈ.ஜீ.தேவசகாயம் 33 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 9 இலக்குகளை சாய்த்தமையும், 1951ம் ஆண்டு யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த வீ. சண்முகம் 26 ஓட்டங்களை கொடுத்து 9 இலக்குகளை சாய்த்தமையும் சாதனையாக திகழ்கிறது.

கடந்த ஆண்டுகளைப் போல் இம்முறை "வடக்கின் மாபெரும் துடுப்பாட்டம்" சூடு பிடிக்கவில்லை என கூறப்படுகிறது. இதற்கு பழைய மாணவர்களின் கல்லூரியுடனான தொடர்பின்மையே காரணம் என கூறப்படுகிறது. வழமையாக வாரக் கணக்கில் வீரர்களை உற்சாகப்படுத்தும் கல்லூரி மாணவர்கள் இம்முறை நாள் கணக்கில் கூட உற்சாகப்படுத்தவில்லை.

(இ-55)

# இலங்கை வந்த இயன்மார்ட்டினை சங்கரி எம்.பி. சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புசபையின் முன்னாள் பணிப்பாளர் இயன்மார்ட்டினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக்கூட்டணித்தலை வருமான வீ. ஆனந்த சங்கரி கடந்த செவ்வாய் அன்று கூட்டணியின் கொழும்புத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் கலந் துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மீது திணிக்கப் பட்ட பலாதகாரம், அத்துமீறல்கள் ஆகியவை பற்றி மிகவும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டதுடன், தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை பற்றியும் மிகத் தெளிவாக ஆராயப்பட்டது.

மேலும், தமிழ் மக்களின் மீதான மனித உரிமை மீறல்கள் மற்றும் சிறுவர்கள், பெண்களின் அடிப்படை உரிமைகள் பற்றியும் இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளனர். (உ)

## அங்குரார்ப்பணம்

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாச அங்குரார்ப்பணம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற வுள்ளது. (உ-75)

## விளையாட்டு போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பீடங்களுக்கிடையே நாளையும் நாளை மறுதினமும் இடம்பெறவிருந்த விளையாட்டுப போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும், இப்போட்டி எதிர்வரும் 22,23ஆம் திகதிகளில் திட்டமிட்ட ஒழுங்கில் இடம் பெறும் எனவும் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு அறிவித்துள்ளது. (உ)


## நாடக ஆற்றுகையாளர்கள் தேவை (Drama Performers)

எமது நிறுவனத்தின் துணை நிறுவனமாக "இயங்கும் செயல்திறன் அரங்க இயக்கம்" Active Theatre movement மிதிவெடி கல்வியூட்டல் செயற்பாட்டுக்காக இரண்டு நாடகங்களை புதிதாக தயாரித்து யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றவுள்ளது. இவ்வாற்றுகைக்கு நடிகர்களாக பங்குபற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிதிவெடி, வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 30.03.2003.
வயது எல்லை : 20 - 35
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்*
*'அருளகம்'*
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(C/5840)

# ஐரோப்பா வெங்கும் இன்று 60 லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம்


## ஈராக் மீதான போருக்கு எதிர்ப்பு

(பேர்லின்)
ஈராக் மீதான யுத்தத்தை தவிர்க்கக் கோரியே ஐரோப்பாவில் 60மில்லியன் தொழிலாளர்கள் 15நிமிட வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர்.

ஐரோப்பிய தொழில் சங்கங்கள் அமைப்பு அதன் 60மில்லியன் ஊழியர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

வெள்ளிக்கிழமை கிறீன்விச் நேரம் 11மணிக்கு அனைத்து உழியர்களும் 10அல்லது 15நிமிடங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று ஐரோப்பிய தொழில்ச் சங்கங்களின் அமைப்பு மேலும் கேட்டிருக்கின்றது.

ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், டென்மார்க், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் ஒரே நேரத்தில் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. (பி-9)



ஐ.நா. பாதுகாப்புச் சபை 12ஆம் திகதி பிரிட்டிஷ் தீர்மானம் பற்றி ஆராய கூடியபோது.

# கமல் தலைமையில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



(சென்னை)
ஈராக் மீது தாக்குதல் நத்துவதற்கு எதிராக கேரளாவில் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ் நாட்டு பிரபல நடிகர் கமலஹாசன் முன்னின்று நடத்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு பகுதி நாடுகளிலிருந்தும் மக்கள் வந்துகலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்கு அரசியல்நோக்கம் எதுவும் இல்லை என்றும் மனிதாபிமான நோக்கத்திலேயே போருக்கு. எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதாகவும கமலஹாசன தெரிவித்தார். (பி)

# ஈராக் மீதான தாக்குதலுக்கு இந்தியா கடும் எதிர்ப்பு

(புதுடில்லி)
ஈராக்கில் பொம்மை ராஜ்யத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என இந்தியா தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் இரு அவைகளுக்கும் விடுத்திருந்த ஈராக் குறித்த தனது அறிக்கையின் மீது ராஜ்ய சபையில் பிரதமர் வாஜ்பாய் இதனைத தெளிவு படுத்தினார். அப்போது இது குறித்து அவர் கூறியதாவது,

ஈராக்கிற்கு எதிராக எந்தவிதமான இராணுவ தாக்குதல்நடத்துவதையும் இந்தியா கடுமையாக எதிர்க்கும்.அந்த நாடு மீது எந்த நாட்டு இராணுவமும் தாக்குதல் நடத்துவதா னாலும் அது கட்டாயம் ஐ.நா.பாது காப்பு சபையினால் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்.

அதேபோல் நிர்ப்பந்தம் காரணமாக ஈராக்கில் ஏற்படும் பொம்மை அரசாங்கத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது. அங்கு பொம்மை ராஜ்யம் அமைவதையாருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் எந்த முடிவும் எடுக்கக் கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

அரசு எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் இருக்கும் எனவும் அவர் உறுதி அளித்தார். அதேபோல வளைகுடா நாடுகளில் வாழும்இந்தியர்களைப் பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். நாங்கள என்ன செய்தாலும் அது நாட்டின் கௌரவம் மற்றும் உலக அமைதியை கருத்தில் கொண்டே செய்வோம். இது குறித்து யாருக்கும் எந்தவித சந்தேகமும் வேண்டாம். தற்போது ஈராக்கில் போர் நடக்கக் கூடிய சூழ்நிலை இருப்பினும் இது நடக்காது என நாங்கள் நம்புகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுடன் நடந்த தொலைபேசி உரையாடல் குறித்தும் விவரித்தார். இந்த உரையாடலின் போது ஈராக் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்க்க வேண்டும், ராணுவ நடவடிக்கை இல்லாமல் குறிக் கோளை அடைய வேண்டும் எனவும அவரிடம் கூறியதாக பிரதமர் தெரிவித்தார். (பி)

# மனிதவுரிமைகளை மீறிய 25பொலிஸார் பதவிநீக்கம்

(புதுடில்லி)
காஷ்மீர் மனித உரிமைகள் மீறும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 25பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளனர்.

இமாலயப் பகுதியில் கடமை புரிந்த இந்த 25பேரும் மனித உரிமைகள் மீறும் நடவடிக்கைகளில ஈடுபட்டமை உறுதிசெய்யப்பட்டதனை அடுத்து இவர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 53 பேருக்கு எதிராக முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக காஷ்மீர் மாநில முதல் அமைச்சர் தெரிவித்துள்ளார். (பி-9)

WORLD NEWS உலக தரிசனம்

# செர்பிய பிரதமர் சுட்டுக்கொலை

(பெல்கிரேட்)
செர்பிய நாட்டுப் பிரதமர் ஸோரான ஜிண்ட்ஜிக் புதன்கிழமை மாலையில சுட்டுக் கொல்லப்பட்டார். அரசுக் கட்டட வளாகத்தில் அவரைச் சூழ்ந்து கொண்ட இருவர் வயிற்றிலும் முதுகிலும் சுட்டனர். இரத்த வெள்ளத்தில். சரிந்த அவர் பெல்கிரேட் மருத்துவமனையில் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரது உயிரைக காப்பாற்ற மருத்துவர்கள் தீவிர அறுவைச் சிகிச்சை செய்தனர். இருந்தும பயனில்லாமல் அவர் உயிரிழந்தார்.

அவரைச் சுட்ட இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

யுகோஸ்லாவிய குடியரசு கடந்த மாதம் இரண்டாகப் பிரிந்து செர்பியா உருவானது. இன்னொரு நாடு மோடன் டெனெக்ரோ என்று அழைக்கப்படுகிறது.

செர்பிய நாடு உதயமானதும் கம்யூனிஸ்டு அல்லாத ஆட்சியை நிறுவியவர் அவர். மேலை நாட்டுப் பாணியில் செர்பியாவை மாற்றியமைப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் ஸோரான்.

செர்பியாவில் பொருளாதார சீர்திருத்தங்களையும் ஜனநாயக நடவடிக்கைகளையும் புகுத்தியவர் ஸோரான்.

இதனால் ஏராளமான அரசியல் எதிரிகளைச் சம்பாதித்துக் கொண்டார் அவர்.

2000 ஆம் ஆண்டு அக்டோபரில் கிளர்ச்சி செய்து அப்போது யுகோஸ்லாவியாவின் அதிபராக இருந்த ஸ்லோபோடான் மிலோஸெவிக் ஆட்சியைக் கவிழ்த்தார்.

அத்துடன் மிலோஸெவிக் மீது இனக் கொலை தொடர்பான போர்க் கால குற்றச்சாட்டுக்களை ஐ.நா.விசாரிக்க வகை செய்தவர் ஸோரான். (பி)

## நெடுமாறன்- வை.கோ. கைதை எதிர்த்து

# 23ஆம் திகதி தமிழ் நாட்டில் உண்ணாவிரதப் போராட்டம்

(புதுடில்லி)
பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பழ நெடுமாறன், வைகோ ஆகியோரின் கைது நடவடிக்கையை கண்டித்து எதிர் வரும் 23ஆம் திகதி தமிழக மாநிலம் தழுவிய ரீதியில் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறவிருக்கிறது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. வைக்கோ, பழநெடுமாறன் ஆகிய இருவரையும் விடுதலை செய்ய மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தின் போது கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இந்தச் சட்டத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் இந்திய கம்யுனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, புதிய தமிழகக் கட்சி இந்திய தேசிய கொங்கிரஸ் ஜனனாயகப் பேரவை, மூவேந்தர் முன்னேற்றக் கழகம் தேசிய எம்.ஜி.ஆர் முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். எனினும் விடுதலைச் சிறுத்தைகள் அமைவு காங்கிரஸ் கட்சி, மாக்ஷிஸ்ற் கம்யுனிஸ்ட் கட்சி என்பன இந்தக் கூட்டத்தை புறக்கணித்துள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி பொடா சட்டம் கொண்டுவரப்பட்ட போது இதனை தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதை தாம் சுட்டிக் காட்டியதாகவும் எனினும் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி அந்த சட்டம் தவறாக பயன்படுத்தப்படாது என்று உறுதி வழங்கிய தாகவும், அவர் தனது உறுதிமொழியை இறுதிவரை காப்பாற்ற வில்லை எனவும் கூறியுள்ளார்.

தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக கொண்டு வரபட்ட பொடாச் சட்டத்தை தமிழக அரசு அரசியல் ரீதியில் தனது எதிரிகளை அழிப்பதற்காக பயன்படுத்தி வருகின்றது என்று குற்றஞ்சாட்டிய அவர் எதிர் வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள நாடு தழுவிய உண்ணாவிரதப் போராட்டத்தில் அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொள்வார்கள் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.(பி-9)

# சதாம் அரசு கவிழ்ந்தால் இரத்தக்களரி ஏற்படும்?

(பக்தாத்)
பாக்தாத்தில் சதாம்ஹுசைன் அரசு கவிழுமானால் ஈராக்கில் இரத்தக் களரிஏற்பட்டு நாடு சின்னாபின்னமாவிடும் என்று ஈராக்கியர்கள் பலரும் நினைக்கிறார்கள்.

இதன் கராணமாக இதுவரை ஆயுதம் வைத்திருக்காதவர்களும் கூட தங்கள் பாதுகாப்புக்காக கள்ளச் சந்தையில் ஆயுதங்களை வாங்கி பதுக்கிவருகிறார்கள். சதாமின் ஆட்சி வீழ்ச்சியுற்றால் நாட்டில் சமய, இனக்குத்துவெட்டுக்கள் அதிகரிக்கும் என்றும் இரத்தக்களரியும் கும்பல் சண்டைகளும் பெரும் எடுப்பில் கொள்ளைகளும் நடக்கும் என்றும் அனேகர் நம்புகின்றார்கள். கடந்த சில வாரங்களாக கள்ளத்தனமாக ஆயுதங்கள் கொள்வனவு செய்வதும் விற்பனை செய்வதும் பெரிதும் அதிகரித்திருப்பதாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் கூறுகிறார்கள்.

சதாம் நகரில் இந்த ஆயுதவியாபாரம் பெருமளவு அதிகரித்திருக்கிறது. பாக்தாத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள இந்த மாவட்டத்தில் பத்துலட்சத்துக்கு மேற்பட்ட ஷியா முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள் சன்னி முஸ்லிம்களால் ஆளப்படும் இந்நாட்டில் இந்தப் பகுதி மக்களே மிகவும் ஏழைகளாகவும் ஒடுக்கப் பட்டவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

ஆயுதங்கள் இப்பகுதிக்கு தொகுதி தொகுதியாகக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளன. இவைகளில் பெரும்பாலானவை ஈரானின் ஷியா பிராந்தியத்திலிருந்து கடத்தி வரப்பட்டவை.பழங்குடித் தலைவர்களால் இவை தொகுதி தொகுதியாக விற்கப்படுகின்றனவாம்.

பக்தாத்தில் அமெரிக்கப் படைகளை வீதி சண்டைகளுக்குட் படுத்தி இரத்த ஆறு ஓடச்செய்யலாம் என்ற சதாமின் திட்டம்,சதாம் நகரில் தோல்வியாக முடியும் என்று கருதப்படுகிறது. ஏனென்றால் இப்பகுதியில் ஷியா மக்கள் அமெரிககரை வரவேற்பார்கள் என்று அமெரிக்க இராணுவத் திட்டம் வகுப்போர் கருதுகிறார்கள். விமானக் குண்டு வீச்சுக்கள் பற்றி மக்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் சண்டையின் பின் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. அமெரிக்கர்கள் அமைதியை ஏற்படுத்தும்வரை, மக்கள் என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கிறார்கள். என்று மேன் நாட்டு இராஜதந்திரி ஒருவர் கூறினார்.

ஷியா முஸ்லிம்கள் கிளர்ந்தெழுவதற்கு சந்தர்ப்பம் இருக்குமென்பதால் மத்தியதர சன்னி முஸ்லிம்கள் தங்கள் குடும்பங்களைக் பாதுகாப்பதற்காக ஆயுதங்களை வாங்கி வைத்துக் கொள்கிறார்கள்.

சதாம் வீழ்த்தப்பட்டால் ஷியா முஸ்லிம்கள் அட்டுழியங்களில் இறங்குவார்கள் என்று சன்னிகள் அஞ்சுகிறார்கள். ஷியாகும்பல்கள் முஸ்லிம்கள் கிளர்ந்தெழுந்து சிவில் யுத்தம் ஒன்றுக்கு வழி வகுப்பார்கள் என்றும் ஈரானுடனான எல்லைப்பகுதியில் ஒரு இஸ்லாமிய நாடு தோன்றி விடும் என்றும் சன்னிப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் கூறியுள்ளார். இப்போதைய ஆட்சியை அவர்கள் வெறுத்தாலும் ஷியாகளின் ஆட்சி வந்தால் இதைவிட மோசமாக இருக்கும் என்றார்.ஈரானை விட சதாம் ஆட்சி எங்களுக்கு நல்லது என்றார் அவர். இப்பொழுது வழங்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் கொண்டு அமெரிக்கப் படைகளை எதிர்த்துப் போராடுவீர்களாவென்று அவரிடம் கேட்டபோது,தமது வீட்டையும் குடும்பத்தையும் பாதகாப்பதே தமது நோக்கம் என்றார்.

ஒவ்வொரு ஈராக்கியருக்கும் ஒரு ஆயுதம் கொடுக்கப்படும். ஒவ்வொரு ஈராக்கியரும் அமெரிக்கர்களை எதிர்த்துட் போராடுவார்கள் என்று ஈராக்கிய அமைச்சர்ஒருவர் தம்மிடம் கூறியதாக முஸ்லிம் நாடொன்றின் இராஜதந்திரி ஒருவர் அண்மையில் கூறியுள் ளார். (பி)

## சைப்பிரஸை இணைக்கும் முயற்சிதோல்வி

(நிகோசியா)
சைப்பிரஸை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைக்கும் முயற்சிக்காக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

பிறேக், சைப்பிரஸ் மற்றும் துருக்கித் தலைவர்களுக்கு இடையில நடைபெற்ற பேச்சு வார்த்தை முறிவடைந்துள்ளது என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார். (பி-9)

**விற்பனைக்கு**

**10 ஸ்ரீ 5735**
**வோக்ஸ்வகன் 1300**

பச்சை நிறமுடைய கார் விற்பனைக்கு சனி-ஞாயிறு நாட்களில் பார்வையிடலாம். நியாயமான விலைக்கு விற்கப்படும். சுவாமி சித்ரூபானந்தா, ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.

தொலைபேசி: 070-212910

(C/5832)


சி.எப்.சி. வாயு பயன்படும்

# குளிரூட்டிகளுக்குத் தடைவிதிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

குளோரோ புளோரோ வாயு (சி.எப்.சி) பயன்படுத்தப்படும் குளிர்சாதனங்களை எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் முற்றாகத் தடைசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சின் ஓசோன் பாதுகாப்புப் பிரிவு இணைப்பாளர் கலாநிதி டபிள்யூ.எல். சுமதிபால தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வீட்டுக் குளிர்சாதனப் பெட்டிகள், அறைக் குளிரூட்டிகள், வாகனக் குளிரூட்டிகள் என்பனவற்றுக்கு குளோரோ புளோரோ காபன் வாயுவே பயன்படுத்தப்படுவதால, வளிமண்டலத்தின் ஓசோன் படலம் சிதைக்கப்படுவதுடன உயிரினங்களுக்கு ஆபத்தான விளைவுகளும் ஏற்படுகின்றன.

இதேவேளை, மேற்படி குளோரோ புளோரோ காபனுக்குப் பதிலாக ஐதரோ புளோரோ காபன் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதுடன், இது தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றன. (உ)

# ஆயுதக் கடத்தல் முயற்சிகள் குறித்து 6 ஆம் சுற்றில் ஆராயப்படவேண்டும்

## பிரதமர் ரணிலுக்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

நாட்டிற்குள் இரகசியமாக ஆயுதங்களை கொண்டுவர தமிழீழ விடுதலைப் புலிகள் எடுத்துகொண்ட முயற்சிகள் குறித்து, டோக்கியோவில் நடைபெறவுள்ள 6ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது கவனத்தில் கொள்ள வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அறிவுரை வழங்கியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பிரதமர்-ஜனாதிபதிக்கிடையிலான சந்திப்புக் குறித்து, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் வெளியிட்டிருந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த 10ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் இரகசியமான முறையில் ஆயுதங்களைக் கடத்த எடுக்கப்பட்ட முயற்சி பாரதூரமான ஒரு விடயமாகும் என்பதை ஜனாதிபதி பிரதமரிற்கு சுட்டிக் காட்டியுள்ளதுடன், இத்தகைய செயலைக் கட்டுப்படுத்தவதற்கு டோக்கியோவில் நடைபெறும் 6ஆம் சுற்றுப பேச்சுவார்த்தையின் போது இருதரப்பிற்கும் இடையில் இணக்கம் காணப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தகைய ஆயுதக் கப்பல்கள் கடற்பரப்பில் நடமாடுவதை உடனிற்குடன் அறிந்து கொள்வதுடன், அது குறித்து மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் எனவும் நாட்டின் பாதுகாப்பு குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி பரதமரிடம வேண்டுகோள் விடுத்திருப்பதுடன்,

இதற்கமைவாக போர் நிறுத்த உடன் படிக்கைக்கு கட்டுப்பட்டு செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்து அடுத்த சுற்றில் பேசப்படும் என பிரமதர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் உறுதியளித்திருந்ததாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# முகமாலையில் சோதனை நடவடிக்கை தீவிரம்

(திருநெல்வேலி)

முகமாலை படையினா் சோதனைச் சாவடியில் பரிசோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வன்னியிலிருந்து குடாநாட்டுக்குள் வருபவர்கள் எடுத்து வரும் பொருட்கள் நவீன சோதனைக்கருவிகள் மூலம் படையினரால் துருவித்துருவி ஆராயப்படுகின்றன.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் கூட தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

அத்துடன், ஆட்களிடமும் கேள்விமேல் கேள்விகள் கேட்கப்படுவதாக பயணிகள் குறை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மிருசுவிலிலிருந்து முகமாலை வரையிலான பகுதியில் உள்ள இராணுவக்காவலரண்கள் பலப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-4)

# மரண தண்டனை விதிப்பதால் கொலைகளை நிறுத்த முடியாது

## சிவில் உரிமை அமைப்புக் கருத்து

(கோட்டை)

சமூகத்தில் தோன்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பொருத்தமான மனிதத்துவமும் சிந்தனை பூர்வமான மாற்று வழிகளைக் கண்டு பிடித்து செயல்படுத்துவதும் அரசாங்கத்துக்குரிய கடமை என்று இலங்கை சிவில் உரிமைகள் அமைப்பு கருத்து வெளியிட்டிருக்கின்றது.

இன்று உலகின் பொதுவான கருத்து மரண தண்டனைக்கெதிராகவே உள்ளது. உலகில் அரைவாசி நாடுகள மரண தண்டனையை ஒழித்து விட்டன. நாங்கள் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதிலும் சட்டங்களை செயல்படுத்துவதிலுமே அக்கறை கொள்ள வேண்டும் என்று அவ்வமைப்பு கூறியுள்ளது.

ஆனால் அதற்கு மரண தண்டனை ஒரு பரிகாரமல்ல. மரண தண்டனை உலகில் எங்காவது விஷேசமாக குற்றங்களை குறைக்க உதவியிருப்பதாகக் காட்ட முடியாது. ஒரு சில குற்றவாளிகளை தூக்கில் ஏற்றிவிட்டால் அரசாங்கம் குற்றங்களைத் தடுக்க துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று சில மனங்களில் ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தலாம். ஆனால் உண்மையான பிரச்சினை அப்படியே தான இருக்கப் போகின்றது என்று சிவில் உரிமைகள் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. இவை ஆழமாக வேரூன்றிப் போன சமூகப்பிரச்சினைகள் சகல மட்டங்களிலும் சட்ட அமுலாக்கல் யந்திரத்தையும் புலனாய்வு அமைப்பையும் சீரமைப்பதற்கு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படுவார்கள். குற்றங்காணப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்ற உறுதியான நிலைப்பாடு இருக்குமானால் குற்றங்களைத் தடுப்பது இலகுவாகும். எமது குற்றவியல் நீதித்துறையில் இதுவே இன்று தேவைப்படும் ஒன்று. எமது குற்றவியல் சட்டத்தின்படி அப்பாவியான எவரும் குற்றங்காணப்பட்டு தண்டனைக்குள்ளாக மாட்டார்கள் என்று சொல்லிவிட முடியுமா? சட்ட அமுலாக்கல் தவறுகளினால் ஏழைகளும வசதி குறைந்தவர்களுமே பெரும் பாலும் தண்டனைக்குள்ளாகிறார்கள். கொலை செய்வது தவறு என்பதை மரண தண்டனை மூலம் தான் கற்பிக்க முடியும் என்று காட்டுவதற்கு அரசாங்கம் ஒரு ஒழுங்குமுறையான கொலைகளைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறது என்பதையே மரண தண்டனைச் சட்டம் எடுத்துக் காட்டுவதாய் இருக்கும்.

மரண தண்டனையை மீண்டும் கொண்டு வருவதானது நம் எல்லோரையும் தரங்குறைந்தவர்களாக்குவதாகும்.

இவ்வாறு அவ்அமைப்பு கூறியுள்ளது. (பி)


**தரம் 08 மாணவர்களுக்கான**

**கட்டுரைப் போட்டி**

கட்டுரையின் தலைப்பு : ''எனக்குச் சிறகு முளைத்தால்''
கட்டுரை 150 தொடக்கம் 175 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
முடிவுத் திகதி : 25.03.2003

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப் போட்டி இல-3**

மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
கற்கும் தரம் :------------------------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------
ஆசிரியர்


# செய்தித்துளிகள்

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை தென் மேற்கு பகுதியில் உள்ள அறிவொளி சனசமூக நிலையத்தின் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் மேற்படி சனசமூக நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

நிலையத்தலைவராக க.தம்பிராசாவும், உபதலைவராக க.சிறிகமலநாதனும், செயலாளராக சு.சுபநாதனும், உப செயலாளராக க.விஜயகாந்தனும் பொருளாளராக வே.விவேகானந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-10)

## வட்டிவீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் வட்டிவீதம் கடந்த வருடம் முதல் ஒரு சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை அறிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு 11 சதவீத வட்டியே வழங்கப்பட்டு வந்தது. புதிய அதிகரிப்பின்படி கடந்த வருடம் முதல் 12 சதவீத வட்டி வழங்கப்படும் எனவும் அச்சபை அறிவித்துள்ளது. (உ-8)

## நுளம்பு வலை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணிப் பிரதேசத்தில் வாழும் 50 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் மற்றும் ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளன. (உ-10)

## சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

வருடாந்த சத்தியப்பிரமாண நிகழ்வு அண்மையில் யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இதில் 250 ற்கும் மேற்பட்ட பொலிஸார் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹெட்டிதர்மசேன முன்னிலையில் இச்சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. (உ-4)

## தீட்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இளஞ் சைவப்புலவர் தேர்வுக்குத தோற்றவுள்ள பரீட்சார்த்திகளில் இதுவரை சைவசமய தீட்சை பெறாதவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு நல்லை ஆதீனத்தில் சமய தீட்சை வழங்கப்படவுள்ளது. (உ-10)

## பங்குனித்திங்கள் உற்சவம்

(கல்வயல்)

கொடிகாமம் சுட்டிபுரம் கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் ஏப்பிரல் மாதம் 7 ஆம் திகதி வரையான நான்கு திங்கட்கிழமைகளிலும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இத்தினங்களில் அம்பாளிற்கு விசேட அபிடேக ஆராதனைகளும், பொங்கல் வழிபாடும்இடம்பெறவுள்ளன. (உ-36)

## மேலும் 5 இலட்சம்

(புத்தூர்)

சமூக நலத்துறைத் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு அரச சிறுவர் இல்லத்திற்கான கைதடி முதியோர் இல்லத்தின் வடபுலத்தில் 43 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தின் தொடர்நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் 5 இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது. (உ-69)

## கலைஇலக்கியப் பகிர்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றிய ஏற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.* 4 மணிக்கு, ஒன்றிய மண்டபத்தில் கவிஞர் ச.வேயஞ்சாட்சரத்தின் கலை இலக்கியப் பகிர்வு இடம்பெறவுள்ளது.

செம்பியன் செல்வன் இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கவுள்ளார். (உ)

## திருட்டு

(குருநகர்)


மூடப்பட்டிருந்த கடையின் முன் கதவு உடைக்கப்பட்டு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் யாழ்.காங்கேசன் துறை வீதி நாச்சிமார் கோவிலடி விநாயகர் றேடர்சில் கடந்த திங்களன்று இரவு இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-74)

## தேட்டம்

(யாழ்ப்பாணம்)

நாடக வீடியோ பிரதிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாக ''செயல் திறந் அரங்க இயக்கத்தினர்'' திருநெல்வேலியில் உள்ள தமது காரியாலயத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் நடத்திவரும் தேட்டம் நாடக வீடியோ படக்காட்சித் தொடரில் எதிர்வரும் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு மன்னார் பேசாலை பகுதியில் வருடந்தோறும் தவக் காலத்தில் பொம்மைகள் மூலம் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்ற ''உடக்கு பாஸ்க்'' எனும் நாடக வீடியோப் படக்காட்சி இடம்பெறவுள்ளது. (உ)




யாழ். கலட்டிப்பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஹெலோட்றெஸ்ற் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. கண்ணிவெடி அகற்றப்பட்ட ஒரு பகுதியையும் இப்பணியில் ஈடுபடும் வாகனத்தையுமே படத்தில் காண்கிறீர்கள். படங்கள்: க.பவன்

# பூக்குளிப்பு

## வெள்ளி முற்றம்

கண்ணுக்குத் தெரியாத சாட்டைகள் தமிழனையே இலக்காகக் கொண்டு வீசப்பட்டன. அவற்றில் ஒன்று தான் அந்தப் பொருளாதாரத தடை!

எறும்பு போல இவள் தபாற்கந்தோரில் ஒவ்வொரு ரூபாயாய்ச் சேமித்து வைத்து என்ன பயன்? தபாற் கந்தோர் திறப்பதில்லை அத்தி பூத்தாற் போலத் திறந்தாலும "காசில்லை" என்று கை விரிக்கிறார்கள் முத்திரையே இல்லாவர்களிடம் காசு எப்படி இருக்கும்?

இரவு முழுவதும் ஒரே அட்டகாசம்... பதினாறு திக்கிலும் கேட்ட பொம்மர் குண்டு வீச்சுகள்.... ஹெலி தீர்த்துக் கட்டிய கலிபர் தாக்குதல்கள்!

இரவு முடிந்து வருகிற இந்த விடிகாலைப் பொழுதில் கூட ஒரு கண்தூங்க முடியவில்லை. இறக்கை அடித்துச் சேவல் கூவும் சத்தத்திற்குக் கூட இதயம் ஒரு முறை உறைந்து மீளுகிறது. சத்தம் இன்றி இடைவெளியாகும் ஓரிரு நிமிடங்களில் கூட, நிசப்தமே பேரொலியாய் உள்ளத்தை ஊடறுக்கிறது காற்றின் ஒவ்வொரு அசைவும் காலன் வருவதாய்க் கனவு வருகிறது. பயம்.... பயம்... விபரிக்கமுடியாத பயம்!

இரவில் விடிவிளக்கு வைத்துக் கொண்டு தூங்குவதே சிறு குழந்தைக் காலம் முதல் இவளுடைய பழக்கம் பயங்கரக்கனவு கண்டு கண் விழிக்கும் போதும், மினுக்கு மினுக்கென்று ஒரு சிறு வெளிச்சம் தெரிந்தால் நிமமதியாக இருக்கும. கிராமத்திற்கு எழுபதுகளின் பிற்பகுதியில் மின்சாரம் வந்த பிறகு, அவள் அறையில் நீல நிறத்தில் ஒரு "பெட்றூம் லைற்" கட்டாயம் எரியும். மின்சாரம் முற்றாகக் கொலை செய்யப்பட்டு, மண்ணெய்யும் இரு நூற்று நாற்பது ரூபா விற்கிற இந்த நேரத்தில்.... இரவு முழுவதும் இருள் மயம்! இருளில் பல உருவங்கள் நடமாடுவது போல இருக்கும். இருட்டில் நிறம் தெரியாதாயினும் அவை பச்சை உடை போட்டது போலத் தோன்றும்.

இரவின் தனிமை பயங்கரமாக மனதை அறுக்கும். வாழ்க்கை முழுவதும் அனுபவித்த துக்கங்களும, அவமானங்களும், தோல்விகளும், ஏக்கங்களும் ஒரு சேர கணத்தில் குலிந்துவிட்டது போல மனம் பாரம் சுமக்கும் எதுவுமே செய்ய எதுவுமே நினைக்கக்கூட மனமில்லாத மனச் சோர்வு இதயமெங்கும் பரவும்.

எழுந்து கண்ணாடியில் முகம் பார்த்தாள். ஓ... அவள் எவ்வளவு சோதித்துப் போய்விட்டாள்? கண்கள் வெளிறிப் போய்க்கிடந்தன. அதன் ஒளியை வயதும் துன்பமும் கொண்டு போய் விட்டன. உணவில் இரும்புச் சத்துச் சேர்ந்தும் கனகாலம் ஆகி இருக்கலாம்.

நேற்று முழுவதும் தேநீர் அருந்தவில்லை. தேநீர் அருந்துவது ஆங்கிலேயரோடு வந்த பழக்கமாயினும், சீனி அதிகமாயத் தேவைப்படுகிற அந்தப் பழக்கத்தை வட்டுவிடலாம் என்று முனைகிறபோது, ஏதோ சொல்ல முடியாத களைப்பு ஏற்படுவது போல மனம் உணருகிறது. யுத்தம் தருகிற மன அழுத்தம் காரணமாகச்




சலரோகம் வந்து... அதன் பின் சீனியை முற்றாக விட்டு விடும்படி வைத்தியர்கள் சொல்லும் போது, விடவேண்டியது தான்! இப்போது மனம் போராடுகிறது. எல்லாம் மனம்தான் .சொர்க்கமும் இந்த மனத்துக்குள்ளே தான் இருக்கிறது. நரகமும் இதற்குள்தான மறைந்திருக்கிறது.

சிகரெட்டையும், மதுபானங்களையும், போதைப்பொருள்களையும் மட்டுமல்ல. தேயிலையையும் குடாநாட்டுக்குள்வராமல் தடுத்தால் நல்ல தென்று ஒரு கணம் நினைத்தாள். அப்போது மனம் பழகும்! மோரை இளநீரை பழஞ்சோற்று நீரை அல்லது கஞ்சியைக் குடித்துப் பழகும்.

திரும்பிக் கதவை அடையுமுன்பே வெடித்துப் பொங்கிச் சரிந்தாள்! மனதிற்குள் தான்!

மனதில் ஒரு மரம் வேரொடு சாய்ந்திருந்தது. கண்ணுக்குள்ளே அம்பு மாதிரித் துளைக்கிற அந்தப் பார்வையுடன் இருந்த அவனை அப்போது அடைந்திருந்தால் இந்தத் தனிமை வாழ்வு அமைந்திருக்காது என்ற நினைப்புக் கசப்புடன் தவிர்க்க முடியாமல் வந்தது. வெளி அழுத்தம் பல உள் அழுத்தங்களைப் பூத்து எழச் செய்திருந்தது. சிந்திப்பதற்கு நேரம் கொடுக்காது, வேலைகளில் மூழ்கிப்போய் விட்டால் மன அரிப்பில் இருந்து தப்பலாம் என்று உணர்ந்தவளாய், இருள் விலகமுதல், பனங்காணிக்குள் நுழைந்து பனங்காய்களைப் பொறுக்கி எடுத்தாள். நடத்தையில் மாற்றத்தை வலிந்து ஏற்படுத்திய போது, உணர்வுகளிலும் சிறிது முன்னேற்றம் தெரிந்தது.

மின்சாரம் இல்லை என்பதனால் மின்தறியில் இவள் வேலை செய்யப் போகவில்லை என்பதற்காய், "இவ்வளவு தானா நீ?" என்று மனச்சாட்சி அரிக்க, மூலையில் அமர்ந்துவிட வேண்டுமா என்று உற்சாகமாய் ஒரு சிறு எண்ணம் தலை தூக்கியது.

மெலிதாய் முளைத்த மனவலிமை மறையான மன உணர்வுகைளத் தூக்கி எறிந்தது "சுப்பர் ஈகோ' எமது வாய்க் கண்விழித்துப் பார்த்தது. பாணிப்பனாட்டு, பனங்காய்ப் பணியாரம், புழுக்கொடியல் செய்யும் பெருந் திட்டம் ஒன்று மனதில் வந்து போனது.

மந்தை மேயும் புல்வெளிகளினூடே தன் நினைவுகளுடன் அவள் நடந்து வந்தாள். மாலையில் அவளுடைய ஆடுகளை இங்கே கூட்டி வர வேண்டும்.

அவனுடைய முகம் புகைபோல அழுத்த மில்லாமல் நினைவுக்கு வந்தது அதை அழுத்தித் துடைத்து எறிந்தாள்.

கோலம், கோபுரம், புடவை, சினிமா, கற்பு, கணவன் ..... இதைப போன்ற சொற்களுக்குத் தான் அந்நியமாகிப்போய் விட்டது பற்றி ஏன் இவ்வளவு உணர்ச்சிவசபடல் என்று ஒரு கணம் வியந்தாள்.

வைரவர் கோயிலைக் கடந்து வந்த போது கோயில்வாசலில் அழுதபடி நிற்கும் ஒரு நடுத்தர வயதுப் பெண் தெரிந்தாள். இவள் அவளை அணுகி விசாரித்தபோது, அந்தப் பெண்ணின கணவன் காணாமல் போய்விட்டது தெரிந்தது ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டதால். தகவல் ஒன்றுமில்லை யாம். சாத்திரக் காரர்கள் "இருக்கிறார்" என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறார்களாம. கணவன் செத்தபிறகும் பூவும் பொட்டுமாய் "சீவச்சிங்காரிச் தத்திரியிறா" என்று ஊர் கதைக்கிறதாம்.

வைரவரிடம் சொல்லி அழுது கொண்டிருந்தவள் இவள் கேட்டவுடன இவளிடம் சொல்லிச் சொல்லி அழுதாள். அவளது உணர்வுகளைப் புரிந்து கொண்டு ஒத்துணர்வுப் பதில்களை வழங்குவது இவளுக்குக கஷ்டமாக இருக்கவில்லை. ஏனென்றால், இவள் தனது உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாக இருந்தாள்.

அவளைப் புரிந்து கொள்ள முயன்றபோது தனது கவலையும் மனச் சோர்வும் மேலும் குறைந்து போனதைத் தெளிவாக உணர்ந்தாள். அவளை அணைத்துத் தன்னோடு வீட்டுக்கு அழைத்து வந்தாள்.

பகல் பன்னிரெண்டு மணி இருக்கும்!

'படபட' வென்று எல்லாத் திசைகளிலும் துவக்கு வெடி ! சீ.... துவக்கு வெடியாய் இக்கமுடியாது முந்திரிகைக் காவல் வெடிகளோ? எப்படித் திடீரென்று எல்லாத் திசைகளிலும் முந்திரிகைத தோட்டங்கள் முளைக்கும்?

"கோட்டையைப் பிடிச்சாச்சாமடா!" யாரோ ஒருவன் சைக்கிளில் வேகமாய்ப் பறந்தான். அவனுக்கு எதிரே பின்னுக்கு மனைவியும் பாரில் இரண்டு பிள்ளைகளுமாய், குடும்ப பாரத்தையே சைக்கிளில் ஏற்றி விளக்கிக் கொண்டு வந்தவர் கூட... சிரித்துக் கொண்டு போவது போலத்தெரிந்தது.

இவளையும் ஏதோ ஒன்று தொற்றிக் கொண்டது. "மனக் கோட்டையைப் பிடித்துவிடவேண்டும்" என்ற எண்ணம் பல முறை வந்து போனது. காணாமல் போனவனை அவள் மட்டுமல்ல இவளும் தேடியாக வேண்டும்.

அப்பொழுதுதான் வடித்தெடுத்த பனங்காய்ப்பணியாரங்களை அவசரமாய் இரண்டு பைகளில் போட்டு எடுத்துக் கொண்டாள். முதலாவதை "வைரவரிடம் சொல்லி அழுதவளிடம்" கொடுத்தாள்.

"அக்கா இதைக் கொண்டு போய்ச் சாப்பிடுங்கோ" காய்ந்த பனாட்டுத் துண்டுகளை இன்னொரு பையில் போட்டு எடுத்துக் கொண்டு,

### கோகிலா மகேந்திரன்

பவியம், விசுவாசம், மரியாதை எல்லாம் சேர்ந்தொரு வடிவம் எடுததாறபோல, இரண்டு பைகளுடன் வீதிக்கு வந்தாள்.

"தம்பி இதைக் கொண்டு போய்ச சாப்பிடுங்கோ" சைக்கிளில் போய்க் கொண்டிருந்த போராளி ஒருவரின் கையில் வலுக் கட்டாயமாய்த் திணித்தாள்.

மீண்டும் வீட்டு முற்றத்துக்குத திரும்பிய போது அவள் முற்றத்தில் குந்தியிருப்பதை அவதானித்தாள்.

"அக்கா எழும்புங்கோ பனங் கிழங்கு அவிப்பம்" என்று அவளுக்கு உற்சாகமூட்டினாள்.

"அவிச்சுப் போட்டுக் காணாமல போனோர் சங்க கூட்டத்துக்குப் போக வேணும். எங்களைப் போலை ஆக்களை எல்லாம் அடிக்கடி ஒண்டாச் சந்திச்சமெண்டால், ஒராள மற்ற ஆளுக்கு நல்ல ஆறுதலாய் இருப்பம். எல்லாரும் சேர்ந்து எல்லாருக்குமாய் உழைப்பம்... எழும்பி வெளிக்கிடுங்கோ"

என்று கூறி அன்புடன் அவள் தோளைத் தொட்டாள்.

அவளது முகத்தில் மெல்லிய முறுவல் தெரிந்தபோது மனம் எல்லாம் சொட்டச் சொட்ட நனைந்து பூவில் குளித்த மாதிரி உணர்ந்தாள்.

அப்போது சொல்லி வைத்தாற் போல அந்தக் கனவு திடீரென நினைவுக்கு வந்தது. கனவிலே அவள் எங்கோ போய்க் கொண்டிருக்கிறாள். போக வேண்டிய கட்டடத்தைச சுற்றி வெள்ளம் நிற்கிறது. கட்டடத்தை அடைய வேண்டுமாயின முழங்காலுக்கு மேல் நிற்கும் வெள்ளத்தில் இறங்கவேண்டும். சேலை நனைந்து விடும் என்று பார்க்க முடியாது. சேலையைத் தூக்கிப் பிடித்தால் கால் தெரியும் என்று நினைக்க முடியாது. சேலையை ஒரு கையால் தூக்கிக் கொண்டு அவள் நீரில் இறங்குகிறாள். அப்போது எங்கிருந்தோகாற்றில் பறந்து வரும் பூ இதழ்கள் அவள் மேல் விழுகின்றன. முழுப் பூக்களும் விழுகின்றன. முழுப்பூக்கள் சில வற்றின் காம்பில் முள் இருக் கிறது. அநத முள் தன்னைக் குத்திவிடுமோ என்று இவள் பயப்படுகிறாள்.

"அது கனவு தானே" என்ற தெளிவு வர இவள் மெதுவாய்ச் சிரித்துக் கொண்டாள்.

---

## சிறுபான்மையினரின் உரிமைகள்தொடர்பில் காவலூரில் கலந்துரையாடல்

(ஊர்காவற்றுறை)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் "அனைவருக்கும் மனித உரிமைகள் சமாதான முறைவழியில் சிறுபான்மையினரின் உரிமைகள்" தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலுக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள அரச, அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், என கிராமமடடத்தில் இருந்து ஐம்பது பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இக்கலந்துரையாடலினை ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்கும் இயக்கத்தின் தலைவர் எஸ். சிவகுருநாதன் நெறிப்படுத்தினார்.

குறிப்பிட்ட கலந்துரையாடலுக்கு ஐரோப்பிய ஆணைக்குழுவும், சர்வோதயமும் அனுசரணை வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது. (உ-75)

---

# புலிகளின் கப்பல் தாக்கியழிப்பு குறித்து ஆராய இரண்டு விசாரணைக் குழுக்கள்

## கண்காணிப்புக்குழு நியமித்தது

(கொழும்பு)

அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமைய போர்நிறுத்தக்கண்காணிப்புக குழு, புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தை விசாரிப்பதற்கு இரண்டு விசாரணைக்குழுக் களை நியமித்துள்ளது.

சம்பவம் பற்றி விசாரணை நடத்தி தமது சிபார்சுகளை தெரிவிக்கவிருப்பதாகவும், எதிர்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெற இடமளிக்காமல் செய்வதற்கு இது உதவும் என்றும் கண்காணிப்பு குழு பிரதித்தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

ஒரு குழு திருகோணமலையில் இலங்கைக் கடற்படையின் பீரங்கி படக்குக கபடனிடமும், படகின் ஏனைய மாலுமிகளிடமும் வாக்கு மூலம் பெறவுள்ளது.

கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய விபரமான சான்றுகள், 12.7 மி.மீ கனரக பீரங்கி களிலிருந்து 15 வேட்டுக்களால் கப்பல் தாக்கப்பட்டிருப்பது பற்றி முன்னர் கண்காணிப்புக குழு கூறியிருப்பது பற்றியும் இக் குழு விசாரணை செய்யும்,

மற்றோர் குழு கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறை தலைமைச செயலகத்திற்கும் முல்லைத்தீவிற்கும் சென்று இது தொடர்பில் விசாரணைகளை நடத்தும்,

கப்பல் தாக்கப்பட்டவேளையில் நடைபெற்றதாக கருதப்படும் கப்பல் மாலுமிகள் 11 பேருக்கும் புலிகள் தலைமைக்குமிடையேயான வானொலி தொடர்பு பற்றியும் வாக்குமூலங்கள் பெறப்படவுள்ளன.

இந்த இரு குழுக்களினதும் அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டதும் கொழும்பிலுள்ள கண்காணிப்புக் குழுத்தலைமை தனது முடிவுகளையும் விதப்புரைகளையும் தயாரிக்கும் என்று ஹொக்லணட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடற்படையினர் மேற்படி சம்பவம் பறறிய ஒளிப்பதிவு நாடாவையும் கண்காணிப்புக் குழுவுக்கு காண்பிக்கவுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார். (உ)

## அங்குரார்ப்பணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி சமாசத்தின் தலைவராக க. இராஜசந்திரன், செயலாளராக ப. திருஞானசம்பந்தன், பொருளாளராக பொ. குமாரசாமி, உபதலைவராக ப. மரியநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

## பனையால் விழுந்து பாடசாலை மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பனை மரத்தில் ஏறிய பாடசாலை மாணவர் தவறிவிழுந்து படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் நெல்லியடி கோயில் சந்தையைச் சேர்ந்த இ. ஞானதீபன் (வயது 16) என்பவரே காயமடைந்துள்ளார். (உ-7-4)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்ட பிராந்திய அலுவலகத்தினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நாடாத்தப்பட்டுவரும் ஆன்மகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று பி.ப 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் "வாக்கிற்கு அருணகிரி" என்னும தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-10)

# ஒன்றியிருந்து நினைமின், உந்தமக்கு ஊனமில்லை
# மனம் ஒன்றிய வழிபாடே மகத்தான பயன் தருவது

நாம் கோபம் அல்லது மகிழ்ச்சி கொள்கிறோம். அதற்கேற்ப நம்மிடம் இருந்து சொற்கள் வெளிப்படுகின்றன. அது போலவே இறைவனைப் பற்றிய நம் சிந்தனைகளே பிரார்த்தனையாக, வழிபாடாக, ஜபம், தியானமாக, சத்சங்கமாக வெளிப்படுகிறது. நாம் பூஜை அறையில் இருக்கிறோம். அல்லது கோவிலில் இருக்கிறோம். நாம் பூஜை அறையிலும், கோவிலிலும் இருப்பது நல்லது தான். ஆனால் பூஜையறையிலும், கோவிலிலும் நம் உடல் மட்டும் இருந்தால் போதாது. உடலோடு உள்ளமும் தெய்வத்தின் சந்நிதானத்தில் இருக்க வேண்டும்.



## மனம், மொழி, மெய் ஒன்றிய வழிபாடு

உடல் இறைவனை வணங்க வேண்டும் உதடுகள் இறைவனைத் துதிக்க வேண்டும் உள்ளமெல்லாம் இறைவனே நிறைய வேண்டும். இவ்விதம் மனம், மொழி, மெய் ஆகியவை மூன்றும் ஒன்றிய வழிபாடு தான் முழுமையான வழிபாடாகும். 'ஒன்றியிருந்து நினைமின், உந்தமக்கு ஊனமில்லை' என்கிறார் நமது குருமார்களில் ஒருவராகிய திருநாவுக்கரசர். 'இறைவனை நினைக்க வேணடும். எப்படி நினைக்க வேணடும்? ஒன்றியிருந்து நினைக்க வேண்டும்' என்கிறார் அவர்.

உடல் ஓர் இடத்திலும், உள்ளம் வேறோர் இடத்திலும் இருக்கக் கூடாது. உடலும், உள்ளமும் ஒன்றுபட்டு இறைவன் திருவுருவத்தை நினைக்க வேண்டும். இறைவன் திருநாமத்தை ஜபம் செய்ய வேண்டும். அப்படிச்செய்தால், உந்தமக்கு ஊனமில்லை. உங்களுக்குஒருகேடும் வராது. உங்களைத் தீமை அணுகாது என்பதே திருநாவுக்கரசரின் நல்லவாக்கு. பலர் ஜபம் செய்வார்கள். தியானமும் செய்வார்கள். ஆனால் அவற்றின் பலன் என்று அவர்களுக்கு ஒன்றும் கிடைக்காது. காரணம் அவர்கள் செய்த ஜபமும், தியானமும் மனம்ஒன்றிச் செய்யப்பட வில்லை என்பது தான்.

## மனம் கலந்தும், கரைந்தும் ஓத வேண்டும்.

திருஞானசம்பந்தரும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இறைவன் திருநாமத்தை ஜபிக்கும்படி நமக்குக் கனிவோடு கூறுகிறார். இதில் அவர் மனம் ஒன்றி, மனம் கலந்தும், கரைந்தும் பக்தி ததும்ப இறைவன் திருநாமத்தை ஜபிக்கும்படிநமக்கு அன்புடன் கூறுகிறார்.

அப்படி மனம் ஒன்றிச் செய்யப்படும் திருநாமம் ஜபம் தான், காதலாகிக் கசிந்து உருகி ஓதப்படும் திருநாம ஜபம் தான் நம்மை நன்னெறிக்கு உய்விக்கும் ஆற்றல் பெற்றது. இதனால் மனம் ஒன்றாமல் செய்யப்படும் திருநாம ஜபம், தெய்வ சிந்தனை ஆகியவை நம்மை உய்விக்கும் அளவுக்கு அவ்வளவு ஆற்றல் பெற்றவையல்ல என்பதனை நாம் உணர வேண்டும். மனம் ஒன்றாமல்ஒரு மணி நேரம் ஜபமோ, தியானமோ செய்வதனால் பெறப்படும பயனை விடமனம் ஒன்றி ஜபமோ, தியானமோ ஐந்து நிமிடமே செய்தாலும் அதுவே அதிக பயன் தருவது என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவேஇறைவழிபாட்டுக்குப் போதிய நேரம் இல்லாமல் இருப்பவர்கள் சிறிது நேரமேயானாலும் மனம் ஒன்றி இறைவனைத் தியானிப்பார்களாயின் அது அவர்களுக்குப் பெரிதும் நலன் விளைவிக்கும். எப்போதும் மனதை ஒருமுகப்படுத்தி இறைவனைத் தியானிப்பவன் எந்தச் சூழ்நிலையில், எங்கேயிருந்தாலும் தெய்வத்தின் சந்நிதானத்தில் இருப்பவன் ஆகிறான்.

**வெள்ளி நற்சிந்தனை**

## அலைபாயும் மனத்தின் தியான: ஜபம்

மனம் ஒருமுகப்பட்டு ஜபம் செய்ய வேண்டும், தியானம் செய்ய வேண்டும் என்கிறீர்கள் அப்படி என்றால் மனதை ஒருமுகப்படுத்தி ஜபமோ, தியானமோ செய்ய முடிவதில்லை. மனம் அலை பாய்கிறது அவ்விதம் அலைபாயும் மனதோடு தான் ஏதோ ஜபம், தியானம் செய்கிறேன். அது தவறா? என் முயற்சியெல்லாம் வீண் தானா? விழலுக்கு இறைத்த நீர் தானா? என்று நீங்கள் கேட்பது எனக்குப்புரிகிறது.

விவசாயி ஒருவன் வயலுக்கு நீர் பாய்ச்சுகிறான். வாய்க்காலில் ஆங்காங்கே பெரிய எலி வளைகள் உள்ளன. விவசாயி பாய்ச்சும் நீர் எலிவளைகளுக்குள்ளும் போகும். அவ்விதம் எலிவளைகளுக்குப் போனது போக மீதி நீர் வாய்க்கால் வழியோடி வயலை அடையும். இது போல், மனம் அலைபாயும் நிலையில் செய்யப்படும் ஜபமும், தியானமும் ஏதோ கொஞ்சப் பலனைத் தரும். முழுவதும் வீணாகி விடாது. மனம் அலை பாய்கிறது. ஒருமுகப்படவில்லை என்பதற்காக ஜபமும், தியானமும் செய்வதை அறவே விட்டு விடவும் கூடாது. ஆரம்பத்தில் மனம் அலை பாய்ந்தாலும், மனம் ஒருமுகப்படாவிட்டாலும் தொடர்ந்து ஜபமும், தியானமும் பழகினால் மனம் மெல்ல அலைபாய்வதை விட்டு ஒருமுகப்பட ஆரம்பிக்கும். எனவே தொடர்ந்த பழக்கம் வெற்றியைத் தரும். முயற்சியைத் திருவினையாக்கும் உருவேறத் திருஏறும்.

## பிரம்மமுகூர்த்தம் உகந்தது

எனவே ஆரம்பத்தில் மனம் ஒருமுகப்படாவிட்டாலும் குறிப்பிட்ட எண்ணிக்கை ஜபம் செய்வது, குறிப்பிட்ட நேரம் தியானம் செய்வது என்பதை நமக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், யந்திர கதியிலேனும் அன்றாடம் நாம் தவறாமல் செய்து வரவேண்டும். 'அதிகாலையில் பிரம்ம முகூர்த்த நேரத்தில் தியானம் செய்வது மிகவும் நல்லது. சூரியோதயத்தின் போதும், சூரிய அஸ்தமனத்தின் பொழுதும் தியானம் செய்ய வேண்டும்' என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியுள்ளார். □

**சுவாமி கமலாத்மானந்தர்**

## ஆன்மீக நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களினால் தொகுக்கப்பட்ட ஸ்ரீசக்ரபூஜை, சிவமகோற்சவம் ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலய கல்யாணமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இந்து சமய அலுவல்கள் விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனும் கௌரவ அதிதியாக கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நூல்களின் ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதனும், சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ ஸ்ரீபதி கிருஷ்ணானந்த சர்மாவும், சிவஸ்ரீ பாலசர்வவேஸ் வரக்குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். (உ-10)

## பிணைமனு நிராகரிப்பு

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக மாணவன் படுகொலை சம்பந்தமாக தடுத்துவைக்கப்பட்டமாணவனை பிணையில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட மேற்படி மாணவனின் த்ந்தை பிணை கோரும் மனுவை மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இதனை ஆராய்ந்த நீதிபதி குமாரரத்ன மேற்படி மனுவை நிராரித்ததுடன் பிணையில் செல்வதற்கு பலத்த எதிர்ப்பும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்வழக்கை ரயல் அட்பாரில் நடத்துவதற்கு சட்டமா அதிபர் தீர்மானித்துள்ளதாகவும் நீதிபதி தெரிவித்துள்ளார். (உ-8)

# நாட்டுக்கு நேரவிருந்த பேராபத்தை தடுத்து நிறுத்தியுள்ளார் பிரதமர்

**ஊடகத்துறை அமைச்சர் பாராட்டு**

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் இணைந்து நடத்திய கண்டனப் பேரணியில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதனால் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற யூலைக் கலவரம் போன்ற குழப்பங்கள் இடம் பெறுவதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடுத்துள்ளார்.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் இம் தியாஸ்பாக்கீர்மாக்கார் தெரிவித்துள்ளார்.

பேருவளை காலிமுகத்திடலின் நிர்மாண வேலைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் நடந்து முடிந்த பேரளவிலான ஆர்ப்பாட்டப் பேரணியின் போது எதுவிதஅசம்பாவிதங்களும் நடைபெறாது பிரதமர் தடுத்து நிறுத்தியதிலிருந்து சிறுபான்மை, பெரும்பான்மை இன மக்களை பாதுகாக்கும் அரசாங்கமாக தற்போதைய அரசு விளங்குகிறது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது.

எதிர் வரும் ஜூன் மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் வெளிநாடுகளில் இருந்து உதவியாக இது வரை பெற்றுக் கொள்ளப்படாத பெரு மளவு நிதித் தொகையை இலங்கை பெற்றுக் கொள்ள இருக்கிறது.

மக்களின் அனுசரணையுடன் ஐக்கிய தேசியமுன்னணி அரசு பல அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இவற்றினைக் கண்டு அதிருப்தி கொண்டுள்ள இனவாத சக்திகளே அரச எதிர்ப்புப் பேரணிகளை நடத்துகின்றன.

அரசுக்கு மக்களின் ஆதரவு இருக்கும் வரை இனவாதிகளினால் நடத்தப்படும் பேரணிகளாலும், எதிர்ப்பு



ஆர்ப்பாட்டங்களாலும் எதுவித பயனும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# 20 சமூக மையங்களில் 'முடக்கம்' ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களிடையே மிதிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் செயல் திறன் அரங்க இயக்கம் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் 'முடக்கம்' என்னும் பரப்புரை ஆற்றுகை நிகழ்வை சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற சமூகமையங்களில் மாலை வேளைகளில் அளிக்கை செய்து வருகின்றது.

பொதுமக்கள் மத்தியில் தெளிவான முறையில் மிதிவெடி தொடர்பான கருத்துக்களை எடுத்துரைத்து மதிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்து வரும் 'முடக்கம்' நாடகம் இது வரை 20 சமூகமையங்களில் ஆற்றுகை செய்யப்பட்டுள்ளது.

இதனை 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்பார்வையிட்டுப்பயனடைந்துள்ளனர். இதனதொடர்ச்சியாக வரும் 15,16,18,19ஆம் திகதிகளில் முறையே தட்டாங்குளம் பிள்ளையார்கோவிலடி, அரியாலை திருமகள் சனசமூக நிலையம், உசன் கந்தசாமி கோயிலடி, சங்கத்தானை சாரதா சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் அளிக்கை செய்யப்படவுள்ளது. (உ)

# யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கணக்கியல் கற்கை நெறிக்கு லண்டன் நிறுவன அங்கீகாரம் என்ற விடயம் தொடர்பாக பத்திரிகைகளில் வெளியான செய்திக்கும் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவை நடத்தி வரும் உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் த. இராஜரத்தினம் மறுப்பு வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் பணக்கொடுக்கல் வாங்கலுக்கும் தமக்கும்எவ்விதத் தொடர்பும்இல்லைஎன்பதை அவா தெளிவுபடுத்தியுள்ளார். (உ)

**சாரதி அனுமதிப் பத்திர**

# செயல் முறைப் பரீட்சை திகதிகளில் மாறுதல்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்கள யாழ். செயலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதன் நிமித்தம் செயல்முறைப்பரீட்சைக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி வரை அனுமதி பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள்தங்கள் செயல் முறைப் பரீட்சைக்கான மாற்றுத் திகதியை எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் இத்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனப் பரிசோதகர், இன்று முல்லைத்தீவுச் செயலகத்தில் நடைபெறும் நடமாடும் சேவையில் பங்கு கொள்வதன் காரணமாகவே இந்த மாற்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (உ)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2.15 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.இரத்தினேஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (உ)

# சமாதானப் பேச்சுக்கள் வெற்றி பெற சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வேண்டும்

**அமைச்சர் ஜயலத் ஜெனீவாவில் அறைகூவல்**

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இலங்கை அரசிற்கும் இடையில் தற்போது நடை பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் பூரண வெற்றி பெறுவதற்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா அறைகூவல் விடுத்துள்ளார்.

ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள 144 நாடுகள் அங்கம் வகிக்கும் உள்ளக பாராளுமன்ற அமைப்பின் செயலமர்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், எதிர் வரும் மே மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள உள்ளகப் பாராளுமன்றஅமைப்பின் கூட்டத்தின் போது சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பான செயற்றிட்டம் ஒன்றை இணைத்துக்கொள்வதற்கு உள்ளகப் பாராளுமன்ற அமைப்பின் செயலாளர் நாயகம் அன்டன் ஜோன்சன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தலைமையில் தழிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களானவி.புத்திர சிகாமணி, சுசில்பிறேமஜயந்த, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத்பதியுதீன் உட்பட 11பேர்கொண்டபாராளுமன்ற



உறுப் பினர் குழு கடந்த 6ஆம் திகதி மேற்படி செயலமர்வில் பங்கேற்க ஜெனீவாவிற்கு பயணமாகி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## இன்னு ஒரு தகவல்

# எது விடியல் நேரம்?

ஒருவர் வந்தார் ''வாருங்கள் சார்! உட்காருங்கள்!'' என்றேன். 'புது வருஷம் பிறந்திருக்கிறது. அதுதான் பார்த்து வாழ்த்துச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன'' என்றார். ''மிக்க மகிழ்ச்சி'' என்றேன். ''போனவருஷக் கஷ்டமெல்லாம் போன வருஷத்தோடு போகட்டும். இந்த வருஷம் நல்லவிதமாக அமையட்டும். இது நமக்கு எல்லாச் சௌகரியங்களையும் கொடுக்கட்டும'' என்றார். ஒவ்வொரு வருஷமும் நாம் இப்படியேதான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் புதிது, புதிதாகத்தான் விடிந்து கொண்டிருக்கிறது. வரும்போது வெளிச்சம். போகும் போது இருட்டு!

அது சரி... உண்மையான விடியல் என்பது என்ன? இதே கேள்வியை ஒரு துறவி, தன்னிடம் இருந்த சீடர்களைப் பார்த்துக் கேட்டாராம். ''விடியல் நேரம் என்று சொல்கிறோமே... அது எந்த நேரம் என்று உங்களால் துல்லியமாகச் சொல்ல முடியுமா?'' என்று அவர் கேட்டாராம். சீடர்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். ஒருசீடர் எழுந்து ''நான் சொல்கிறேன்'' என்றார். ''சொல்லு''என்றார் துறவி ''தொலைவில் வரக்கூடிய ஒருமிருகம் ஆடா? அல்லது மாடா? என்று இனம் கண்டு கொள்கிற நேரம் இருக்கிறது பாருங்கள். அதுதான் வி.டியல் நேரம'' என்று விளக்கம் கொடுத்தார் அவர்.

''அது சரியான பதில் இல்லை, விடியல் நேரம் அது இல்லை'' என்று சொல்லிவிட்டார் அந்தத் துறவி. இன்னொரு சீடர் எழுந்தார். 'ஒருமரம் இருக்கிறது. அது ஆலமரமா? அல்லது அரசமரமா? என்று அடையாளம் காணக்கூடிய நேரம் இருக்கிறது பாருங்கள். அதுதான் வீடியல் நேரம' என்று சொனனார். 'அதுவும் சரியான பதிலில்லை' என்று சொல்லிவிட்டார் துறவி. அதன் பின்னர் எந்தச் சீடரும் எழவில்லை. 'இதற்கு மேலும் நாம் விளக்கம் கொடுத்துக்கொண்டு இருந்தால், நம்முடைய அசட்டுத்தனம் வெளியில் தெரிந்துவிடும' என்று புரிந்து கொண்டார்கள். அதனால் பேசாமல் இருந்து விட்டார்கள்.

'சுவாமி நீங்களே சரியான பதிலைச் சொல்லிவிடுங்கள் உண்மையிலேயே' வடியல் நேரம் எது என்று கேட்டார்கள். அந்தத்துறவி, 'நம்முடைய உதவியை நாடிவருகிற ஓர் ஆண் நம்முடைய சகோதரன் என்றும் அதுமாதிரிவரக் கூடிய ஒரு பெண் நம்முடைய சகோதரிஎன்றும் நினைக்கக்கூடிய ஒரு நேரம் இருக்கிறது பாருங்கள். அதுதான் விடியல் நேரம் என்று விளக்கம் கொடுத்தார் அந்தத் துறவி. இந்தப் பெரியவர் சொல்கின்ற அடிப்படையில் யோசித்துப் பார்த்தால்... இன்னும் நமக்கு விடிவுகாலம், விடியல் நேரம் வந்ததாகத் தெரியவில்லையே!

நாளேடுகளைப்பாருங்கள். மற்றவர்களைச் சகோதரனாகவும், சகோதரியாகவும் நினைக்கின்ற சகோதரர்களையா இந்தக் காலத்தில் பார்க்க முடிகிறது? அடித்து விரட்டுவதும், நீ வேறு, நான் வேறு என்கின்ற நினைப்பும் தானே இப்பொழுது அதிகமாகிப் போய்விட்டது. அப்படியிருக்கும் பொழுது, புதுவருஷம் பிறந்துவிட்டது என்பதும், புது வெளிச்சம் கொடுத்துவிட்டது என்பதும் பொய்தானே! ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதில் கூட எவ்வளவு பித்தலாட்டம் தெரியுமா?

ஒருவர் வந்தார். மற்றவரைப் பார்த்து ''நான் புத்தாண்டு வாழ்த்து அனுப்பினேனே.. உங்களுக்குக் கிடைத்ததா?'' என்றார். 'ஓ! கிடைத்ததே நானும் நன்றி கார்டு அனுப்பினேனே!'' என்றார் இவர். உடனே அவர் ஏன் சார் பொய் சொல்கிறீர்கள்? நான் உங்களுக்குப் புத்தாண்டு வாழ்த்து அனுப்பவே இல்லையே! சும்மா சொல்லிப்பார்த்தேன். உடனே கிடைத்தது என்று அடித்து விடுகிறீர்களே'' என்றார் அவர். அதற்கு இவர் 'ஏன்சார்? வாழ்த்து அனுப்பினதாக நீங்கள் பொய் சொல்கிறீர்கள் அப்படியிருக்கும் பொழுது அது கிடைத்தாக நான் பொய் சொல்லக் கூடாதா?'' என்றார். இவர்களுக்கெல்லாம் எப்பொழுது சார் விடிவுகாலம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

---

உலக மகா கப்பல் நிறுவனம்

# கொழும்பு ஊடாக அதிநவீன கப்பல் சேவையை ஆரம்பிக்கும்

(கொழும்பு)

உலகின் மிகப்பெரிய கப்பல் போக்குவரத்து நிறுவனமான 'மேட்' கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக அதி நவீன கப்பல் சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிறுவனத்தின் மேற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் நடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரி ஜேவ்பா, இது தொடர்பாக கப்பல போக்குவரத்து அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இந் நிறுவனத் திடம் ஒரே தடவையில் சுமார் 7ஆயிரம் கொள் கலன்களை ஏற்றிச் செல்லும் கப்பல் வசதிகள் உள்ளன.

இதனடிப்படையில், அடுத்த இரண்டு வருடகாலத்தில் ஜெயா இறங்கு துறையில் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு இலட்சத்து 25ஆயிரம் கொள்கலன்களை பிறநாடுகளுக்கு ஏற்றிச் செல்வதற்கு துறைமுக அதிகார சபையுடன் இந்நிறுவனம் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

அத்துடன் 40ஆயிரம் உள்ளூர்ப் பெருட்களின் ஏற்றுமதிக்கும் இந்நிறுவனம் பொறுப்பாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. (இ-8)

---

தென்னிந்திய திரைப்பட இயக்குநர்கள்

# போராட்ட உணர்வுகளோடு விளையாட முற்படுகிறார்கள்

## இதற்கு இடமளிக்க முடியாது என்கிறார் தமிழினி

(யாழ்ப்பாணம்)

தென் இந்திய திரைப்பட இயக்குநர்கள் இலாபம் ஈட்டும் நோக்குடன் எமது போராட்ட உணர்வுகளோடு விளையாட முற்படுகிறார்கள். அத்துடன் எமது புனிதமான போராடடத்தையும் கொச்சைப் படுத்த முனைகிறார்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற 'உப்பில் உறைந்த உதிரங்கள்' என்ற திரைப்பட வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், தென்னிந்தியாவில் இருந்து வெளிவரும் திரைப்படங்கள் மிகைப்படுத்தப்பட்ட கற்பனை காரணமாக எமது சமூகத்தின் மத்தியில் பல்வேறு சமூக பிரச்சினைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றன.

இந்தவகையில், எமது கடற்புலிகளின் ஆதரவுடன் நிதர்சனம் மகளிர் பிரிவினால் தயாரிக்கப்பட்ட ''உப்பில் உறைந்த உதிரங்கள்'' என்ற திரைப்படமும் மற்றும் எமது அமைப்பினரால் தயாரிக்கப்பட்ட பல்வேறு திரைப்படங்களும் ஒரு வித்தியாசமான முறையில் அமைந்துள்ளதுடன் எமது வித்தியாசமான நடைமுறைகளையும் எமது மக்களின் வித்தியாசமான நடைமுறைகளையும் கொண்டமைந்துள்ளன.

விடுதலைக்காகப் போராடும் எமது போராளிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்த தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர்கள் முற்படுகிறார்கள். இதற்கு ஒரு போதும் நாம் இடமளிக்கப் போவது இல்லை.

முன்பு ஒரு காலத்தில் பெண்கள் செல்லக்கூடாது என பலரால் கூறப்பட்டு வந்தமை பற்றி உங்களுக்குத் தெரியும். இந்நிலையில் இப்போது நாம் கடலையே ஆழ்கின்ற நிலையில் உள்ளோம். எமது சாதனையை கடலிலும் நிகழ்த்தியுள்ளோம். எனவே பெண்களால் எதனையும் சாதிக்க முடியும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எங்கள் போராட்டத்தின் வரலாறுகளையும் சாதனைகளையும் எதுவித கற்பனைகளையும் சேர்க்காது உருவாக்கியதே எமது திரைப்படங்கள் என்பதை இந்த திரைப்பட மூலம் ஆவணப்படுத்தியுள்ளோம் என்றார். (உ-7)

---

பொய்ச் சாட்சியமளித்த

# ஊர்காவல்படை வீரருக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்பு)

கடந்த புதனன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணையின் போது பொய்சாட்சியமளித்தமைக்காக டபிள்யூ.எம்.ஜயசூரிய என்ற ஊர்காவல்படைவீரரை விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேல்நீதிமன்ற நீதிபதி எரிக் பசநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

ஜயசூரிய, தனது சாட்சியத்தின் போது தேர்தல் தினத்தன்று தான் வாக்குச் சாவடியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றிக் கொண்டிருந்தபோது ஒரு ஜீப் வண்டியில் சிவில் உடையில் வந்த சிலரே ஒருவரையும் வாக்களிக்க வேண்டாம் என எச்சரிக்கை செய்தார் எனவும், அவர்கள் துப்பாக்கிகள் வைத்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

அவரைக் குறுக்கு விசாரணை செய்த சொலிசிற்றர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, சாட்சி ஏற்கனவே இரகசியப் பொலிசாருக்குகொடுத்த வாக்குமூலத்தில், சம்பவ தினத்தன்று ஆறுவரையிலான வாகனங்களில் வாக்குச்சாவடிக்கு வந்தவர்கள் துப்பாக்கிகள் சகிதம் வாக்காளர்களை எச்சரித்ததாகவும் அவர்கள் சீருடைகள் அணிந்திருந்தார்கள் என்றும் கூறியதாக தெரிவித்தார்.

அவர் சாட்சியிடம், நீர் இரகசியப் பொலிஸாருக்கு கொடுத்த வாக்குமூலம் உண்மையா, இல்லையா எனக் கேட்டபோது சாட்சி, உண்மை எனத் தெரிவித்தார். அவ்வாறாயின் அதற்கு முரணாக நிதி மன்றத்தில் கூறியவை பொய்யென ஒப்புக் கொள்கிறீரா? எனக் கேட்ட தற்கு சாட்சி மௌனம் சாதித்தார்.

இதனையடுத்து நீதிபதி சாட்சியை விசாரணை முடியும் வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி உடத்தலவின்னவில் 10முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதையடுத்து சந்தேகத்தின்பேரில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, அவரின் புதல்வர்களான லொஹான் ரத்வத்தை, சாணக்க ரத்வத்தை ஆகியோர் உட்பட 14பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அவர்களுககு எதிராக ட்ரயல் அற்பார் முறையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

மேல்நிதிமன்ற நீதிபதிகள் எரிக் பாபநாயக்க, தீபாளி விஜயசுந்தர,சுனில் ராஜபக்ஸ ஆகியோர் முன்னிலையில் விசாரணைகள் நடை பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

---

## இராசி பலன்

**14.03.2003**

**(மாசி 30, வெள்ளி)**

| | |
|---|---|
| ஏகாதசி | மு.இ 10.39வரை |
| புனர்பூசம் | கா.7.13 வரை |
| இராகுகாலம் | 10.52 - 12.22 |
| சுபநேரம் | 6.22 - 7.52 |

**ஏகாதசி விரதம்**

**மேடம்**
புத்தி சஞ்சலம், தனநாசம், காரியதாமதம், வாகனசுகம்.

**இடபம்**
புதிய பொருள் சேர்க்கை, மாதர் நட்பு, காரிய அனுகூலம், நற்கீர்த்தி.

**மிதுனம்**
விவாதம், போசனசுகக்குறைவு, எடுத்த கருமம் தாமதமாகும், தாழ்ந்த சுபாவம்.

**கடகம்**
நல்லபடுக்கை, நல்லவரவேற்பு, வெகுமானம், தெய்வசிந்தை.

**சிங்கம்**
கீழ்ப்படிவு, சோம்பல் நிலை, முயற்சி தாமதம், சுபசெலவு.

**கன்னி**
தெய்வதரிசனம், குடும்பசுகம், நல்வரவு, முயற்சிபலிதம்.

**துலாம்**
மரியாதை, நன்கொடை, இஷ்டசித்தி, தொழில் முன்னேற்றம்.

**விருச்சிகம்**
வீண் அச்சம், எதிர்பாராத செலவு, உத்தியோக பங்கம், வயிற்றுக்கோளாறு.

**தனுசு**
கலகம், பொருள் விரயம், சரீரபீடை, காரியதாமதம்.

**மகரம்**
ஸ்திரிசௌக்கியம், சென்றஇடத்தில் செல்வாக்கு, தனலாபம், விருந்துபசாரம்.

**கும்பம்**
காரிய சித்தி, சிநேகிதர் சந்திப்பு, தேக ஆரோக்கியம், சத்துரு ஜெயம்.

**மீனம்**
மனக்கவலை, வழியில் இடையூறு, முயற்சி தாமதம், உறவினர் உதவி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

---

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மலையக மக்களை புறக்கணிப்பது ஏன்?

இ.தொ.ஐ.மு தலைவர் கவலை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மக்களின் போராட்டங்கள் மற்றும் பல்வேறு கோரிக்கைகளுக்கும் மலையக மக்கள் தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்ற போதிலும், வடக்கு - கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மலையக மக்கள் விடயத்தில் தொடர்ந்தும் பாரபட்சம் காட்டுகின்றனர்.

இவ்வாறு, இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் ரி.வி. சென்னன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், மலையக மக்களின் பிரஜாவுரிமை தொடர்பாக முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ்.சதாசிவம் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் திருத்தம் கொண்டுவந்த போது, பிரதான எதிர்கட்சி, மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஆனால், வடக்கு -கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ் விடயத்தில் பாராமுகம் காட்டியமை கவலையளிக்கிறது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும மக்களும் மலையகத்தில் வாழும் மக்களும், தமிழர்கள் என்ற கோடபாட்டுக்குள் அடக்கப்படுகின்றனர்.

இதனால் இவ்விருபகுதிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இடையே பரஸ்பர உறவுகள், ஆதரவுகள் இருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தற்போது முன்னெடுகப்பட்டுவரும் சமாதான முயறசிகளுக்கு மலையகமக்களினதும், கட்சிகளினதும் பூரண ஆதரவு எப்போதும் உண்டு எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## சமுர்த்தி வங்கி திறப்பு

(பருத்தித்துறை)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கான உடுப்பிட்டிச் சமுர்த்தி வங்கிச் சங்கத்திறப்பு விழா பிரதேச செயலர் கே.கனகரத்தினம் தலைமையில் நாளை சனிக்கிழமை இமையாணனில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் கே.குணராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும்,

யாழ் சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம் யாழ்.தலைமைக காரியாலய உதவி அரசாங்க அதிபர் வி.வரபத்திரபிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ.சிவசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்,

விடுதலைப் புலிகள் வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆர்.தயா, கரவெட்டி உதவிப்பிரதேச செயலர் கே.சிவபுண்ணியம், இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். சிவநாதன், மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி ரீ.கணேசலிங்கம், அதிபர் கே.நடராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-52)

வாள் போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு
-குறள் -

வலம்புரி

## யுத்தம் என்றால் அழிவுதான்

இருபது வருட கால யுத்தத்திற்கு முடிவுகட்டி இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் நோர்வே அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தம் தீர்வல்ல என்பது சகல தரப்பினரினதும் பொதுவான கருத்து.மீண்டும் யுத்தம் தொடுக்கப்பட்டால் அந்த யுத்தம் மனித அழிவுகளையும் மனவியாதிகளையும் தருமேயொழிய யாரையும் யாரும் வெல்ல முடியாதென்பது முடிந்த முடிபு. இதனால் எவருமே யுத்தத்திற்கு ஆதரவாக கொடி பிடிக்கப் போவதில்லை.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான ஒரே வழி சமாதானப் பேச்சுவார்த்தையே.ஆனால் அச் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்தே சர்ச்சைகள் எழுகின்றன.

அதாவது விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்ட பின்னரே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்பது ஒரு தரப்பின் வாதம்.மாறாக புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடுவதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.அதன் பின்னரே அவர்களோடு பேச வேண்டும் என்பது இன்னோர் தரப்பின் நிலைப்பாடு.மேற்கூறிய இரண்டு நிபந்தனைகளையும் விடுதலைப் புலிகள் ஒரு போதும் ஏற்கப்போவதில்லை என்பதும் தெரிந்த விடயமே இந்த உண்மை நிபந்தனையை முன்வைப்பவர்களுக்கும் தெரியாததல்ல. அப்படியிருந்தும் நிபந்தனையை முன் வைப்பதன் நோக்கம் சமாதான முயற்சிகளை ஸ்தம்பிக்க செய்வதேயாகும்.அதாவது யுத்தத்திற்கு ஆதரவில்லை என்பது போல மக்கள் மத்தியில் காட்டிக் கொண்டு சமாதான முயற்சிகளும் சறுகு கட்டை போட்டால் அத்தகையவர்களின் உள்ளார்ந்த நிலை எப்படி என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

யுத்தம் என்புதை நாம் விரும்பவில்லை.அது நம்மீது திணிக்கப்பட்டதொன்று என்ற புலிகளின் கருத்தை அரசு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை முன்னெடுப்பதற்கு புலிகள் முனவந்திருக்கும் போது அரசு அதனை தகுந்தமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சமாதானத்தை மக்கள் இரு கரம் நீட்டி வரவேற்கின்றனர். அதற்காக அவர்கள் ஏங்கித் தவிக்கின்றனர்.பிரிவுகளையும் இழப்புக்களையும் தாங்கித் தாங்கிச் சோர்ந்து போன உள்ளங்களுக்கு ஆறுதல் கிடைக்க வேண்டுமாயின் அதற்கு ஒரே வழி சமாதானமே.

இந்தச் சமாதானத்தை அடைய சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.தற்போதைய சமாதானம் குழம்புமாயின்-குழப்பப்படுமாயின் மீண்டுமோர் சமாதான முயற்சியென்ற பேச்சுக்கே இடமளிக்க முடியாது.

எனவே இலங்கைத் தீவை யுத்தத்தில் இருந்து மீட்டு அதனை வளம் நிறைந்த நாடாக மாற்றுவதற்காக சகலரும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

# இலங்கை வீதிகளில் ஓட்டுநர் உரிமம் இல்லாத ஓட்டுநர்களே அதிகம்

## பயிற்சிக் கல்லூரி அமைப்பது பற்றி ஆசிய நிறுவனம் யோசனை

(கோட்டை)

இலங்கையின் நெடுஞ்சாலைகள் உரிமம் இல்லாத வாகன ஓட்டுநர்களால் நிறைந்து போய் உள்ளன. இதனால் வீதி விபத்துக்களினால் ஏற்படும் மரணங்களும் காயங்களும் ஒரு தொற்று நோயைப் போல அதிகரித்து வருகின்றன.

காயங்கள் தடுப்புக்கான ஆசிய நிறுவனத்தின் தலைவர் கிறீக் கிரா.ஃப்ட் கூறியுள்ளார். ஆசியாவில் போக்குவரத்து விபத்துக்களினால் ஏற்படும் மரணங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அரச சார்பற்ற அமைப்பின் தலைவர் அண்மையில் கொழும்பில் இக்கருத்தை வெளியிட்டார்.

தனியார் துறைக்கும், வர்த்தகத் துறைக்கும் தேவையான வாகன ஓட்டுநர்களுக்கான ஒரு கல்லூரி அமைக்கப்பட்டால், இலங்கையில் கணிசமான அளவில் வீதி விபத்துக்களை தடுக்க முடியும் என்று அவர் கூறினார்.

வீதிப் பாதுகாப்புப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த தேசிய ஊடகங்களில் பிரசாரம் செய்வதும் ஓட்டுநர் பயிற்சிகளை வழங்குவதும் ஓர் இணைப்பு செயற்பாடாக தமது அமைப்பு மேற் கொள்ளவிருப்பதாக திரு கிறக் கூறினார்.

இலங்கையில் வாகன ஓட்டுநர் பயிற்சி நிறுவனம் ஒன்றை அமைப்பதன் மூலம் ஏற்கனவே உள்ள ஓட்டுநர்களுக்கு சீரான பயிற்சி கொடுப்பதுடன், உரிமங்களை இலகுவாகவும் பெற்றுக் கொள்ள உதவ முடியும் என்றார் அவர். ஐந்து ஆண்டுகளில் கணிசமான விகிதத்தில் ஓட்டுநருக்கு மீளப் பயிற்சி அளிக்க முடியும் என்றும் இதனால் வீதி விபத்துக்களை பெருமளவில் குறைக்க முடியும் என்றும் அவர் சொன்னார்.

ஓட்டுநர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்படுவதாகவும், அக்கல்லூரி நிறுவப்பட்டால் ஓட்டுநர்களின் ஓட்டும் திறமை சீர்மைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஊக்கமளிப்பதும் உற்சாகமூட்டுவதுமான பயிற்சித் திட்டங்கள் மூலம், முறையான ஓட்டுநர் பயிற்சித் திறமை அவசியம் தேவை என்பதை மக்கள் உணரச் செய்ய முடியும் என்று திரு கிறீக் மேலும் கூறினார்.

போக்குவரத்து பொலிஸ் பயிற்சிகளும் முற்போக்கானவையாய் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஸ்தாபனத்தைச் சேர்நதவரும் அவுஸ்திரேலியாவில் நியூசவுத் வேல்ஸைச் சேர்ந்தவருமான லோறிமுரன் கருத்து வெளியிடுகையில் வீதிப் பாதுகாப்புப் பற்றி பொது மக்கள் மத்தியில் முறையான புரிந்துணர்வு இருப்பதும், கல்வி அறிவும் வீதி விபத்துக்களைப் பெருமளவில் குறைக்க உதவும் என்பது தங்கள் சொந்தப் பிரதேச அனுபவம் ஆகும் என்று கூறினார்.

போக்குவரத்து காவலரைத் துரிதமாக செயல்பட ஊக்குவிப்பதன் மூலமும் வீதிவிபத்தை பெருமளவில் குறைக்க முடியும் என்று அவர் கூறினார்.

வியட்நாமில் இந்த அமைப்பு வெற்றிகரமாக சில திட்டங்களை செயல்படுத்தியிருப்பதாகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் தங்கள் முயற்சியின் மூலம் தலைக்கவசம் அணிவதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர் என்றும் பள்ளிச் சிறார்கள் மத்தியில் 50,000 தலைக்கவசங்களை தங்கள் அமைப்பு விநியோகித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையிலும் பள்ளிச் சிறார் மத்தியில் அவ்வாறான விழிப்புணர்வை ஏற்படுத்த தாங்கள் ஆலோசித்திருப்பதாக மேற்படி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் குரு ஆன்ஹ் கூறினார். (பி)

# ஊடக நிறுவனங்களை அச்சுறுத்தும் அதிகாரம் எவருக்கும் கிடையாது

## விமல் வீரவன்சவுக்கு சுனந்த தேசப்பிரிய பதிலடி

(கொழும்பு)

ஊடக நிறுவ்னங்களை முற்றுகையிடவோ அல்லது மூடிவிடவோ, மூடிவிடுவதாக அச்சுறுத்தல் விடுக்கவோ எந்தவொரு அரசியல் கட்சிக்கும் உரிமை கிடையாது.

இவ்வாறு சுதந்திர ஊடக இயக்க அமைப்பாளர் சுனந்த தேசப்பிரியவினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச சமாதானத்திற்கு ஆதரவாகச் செயற்படும் தனியார் துறைக்குச் சொந்தமான ஊடக நிறுவனங்களைச் சுற்றி வளைக்கப் போவதாக அச்சுறுத்தியிருந்தார்.

கூட்டம் நடத்துதல், கருத்து வெளியிடுதல் என்பவற்றுக்காக ஜனநாயக உதவிகளைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்திக் கொண்டிருக்கும் இக்கட்சிகளின் உறுப்பினர் ஒருவர் கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் விதத்தில் இவ்வாறு அச்சுறுத்தியிருப்பது உரிமை மீறும் செயலாகும் எனவும் இவ்வுரை குறித்து சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறையின் அடிப்படை ஒழுக்க நெறிகளை மீறாமல் அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் ஊடக உரிமை எந்த ஒரு ஊடகவியலாளர்களுக்கும் இருக்கிறது என்றும் அந்த அறிக்கையில் சுனந்த தேசப்பிரிய வலியுறுத்தியிருந்தார். (உ-10)

# தேசிய கூட்டுக்குழு ஏற்பாட்டில் சமஷ்டியை அமுல் செய்வது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழு

(கொழும்பு)

சமஷ்டி ஆட்சிமுறையை அறிமுகம் செய்யும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென பிரபலமான நபர்களைக் கொண்ட குழுவொன்றை தேசிய கூட்டுக்குழு நியமித்துள்ளது.

வண.மல்வத்தை மகாநாயக்க தேரர் றம்புக்வெல ஸ்ரீவிபசி அவர்களின் வேண்டுகோளின் பேரில் இக்குழு அமைக்கப்பட்டதாக தேசிய கூட்டுக் குழுவின் செயலாளர் டாக்டர் பியசேன திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் எஸ். டபிள்யூ வல்பிட்ட விளங்குவார்.

ஏனைய உறுப்பினர்களாக முன்னாள் சட்டமா அதிபர் ராஜா வனசுந்தா, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் லூசியன் டீ அல்விஸ், முன்னாள் சொலிசிற்றர் ஜெனரல் டக்ளஸ் பிரேமரத்தின மற்றும் எம்.இஸட்.அக்பார்,டாக்டர் திசாநாயக்க ஆகியோர் பணிபுரிவர்.

சமஷ்டி ஆட்சி முறைக் கோரிக்கையின் பின்னணி, இலங்கையில் சமஷ்டி முறைக்கான சூழல் உள்ளதா? சமஷ்டி முறையை அமுல் செய்வதால் நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியனவற்றிற்கு அரசியல்,பொருளாதார, சமூக ரீதியில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் சமஷ்டி முறைக்கு பதிலீடு செய்யக் கூடிய ஏதேனும் மாற்றுமுறை இருக்கிறதா? ஆகிய சாராம்சப்பட்ட விடயங்களை இக்குழு ஆராய்ந்து தமது விதப்புரைகளை செய்யும்.

குழு தனது அறிக்கையை வண.மல்வத்தை மகாநாயக்கரிடம் கையளிக்கும் என்று குழுவின் செயலாளர் திஸநாயக்க தெரிவித்தார்.

ஆலோசனைகளை சமர்ப்பிக்க விரும்புவோர் கொழும்பு பௌத்த வாலிபர் சங்க கட்டடம் 3ஆம் மாடியினுப் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## கும்பாபிஷேகம்

(உரும்பிராய்)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிரிவரும் 27 ஆம் திகதி வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது. (உ-215)

## நகரசபை மண்டபம் அமைக்கக் காணி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நகரசபை மண்டபத்தை அமைப்பதற்கு அப்பகுதியில் நிலம் ஒன்றினைப் பெற்றுத் தருமாறு சாவகச்சேரி நகர சபையிடம் அமைச்சர் தி.மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி காணி பெற்றுக் கொடுக்கப்படுமிடத்து நகரசபை மண்டபம் அமைப்பது மற்றும் அதனோடிணைந்த தேவைகளுக்கான நிதியை அமைச்சர் மகேஸ்வரனே ஏற்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-4)

## மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

(உரும்பிராய)

யுனிசெவ் நிறுவனமும் சர்வோதய அமைப்பும் இணைந்து நடத்தும் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு உரும்பிராய் வடக்கு ஜே/264 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறவுள்ளது.

இப்பகுதியில் உள்ள அனைத்து மக்களையும் இக்கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-215)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

சப்பறம் மற்றும் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே 17,18,19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-10)

## திசைரி தியானம்

ஓம்

### ஆத்மீக வீரன்

ஒழுங்காக உடற்பயிற்சி செய்வதன் மூலமாக உன் தேகத்தை ஆரோக்கியமாகவும் உறுதியாகவும் வைத்துக் கொள். நீசெய்யும் காரியங்களை தூய மனச் சாட்சியுடன் தினமும் ஒரு குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொள். மனதைக் கூர்மையாக ஒரு காரியத்தில் செலுத்தும் சக்தியைப் பயில்வாய். உயர்ந்த எண்ணங்களை வளர். நீ செய்யும் காரியம்யாவினும் வெற்றி வேண்டும் என்ற உறுதியுடன் செய். உன் முயற்சிகளில் வெற்றியடைவாய். இதுதான் மேலான இரகசியம். நீ ஆத்மீகவீரனாகலாம்.

சுவாமி சிவானந்தர்

## தவக்கால நற்சிந்தனை

**"ஆண்டவரே, நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார் தான் நிலைத்து நிற்க முடியும்?"**

இஸ்ராயேல் மக்கள் இறைவன் தங்களுக்கு காட்டிய பாதையிலிருந்து விலகி, பாவ வாழ்க்கை வாழ்ந்த போது, அவர்களை மீண்டும் தனது பாதைக்கு அழைத்து வர எசேக்கியேல் இறைவாக்கினர் மூலம் அவர்களோடு பேசுகின்றார். தீயவர் திருந்த வேண்டும் என்பது இறைவன் கொடுக்கும் அழைப்பு. அதையே இயேசுவும் தமது சீடர்களிடம் தெளிவுபடுத்துகின்றார். சட்டங்களின் மூலம் தீமையை பார்ப்பதை விட, பிறரன்பின் அடிப்படையில் அதை நோக்க வேண்டும் என்று இயேசு ஒரு புதிய சிந்தனையை நமக்கு தருகின்றார். நமது சமூக வாழ்வில் சட்டங்களின் அடிப்படையில் நாம் வாழ்வதை விட, பிறரன்பின் அடிப்படையில் நாம் வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார்.

காவலன்

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வேறு பரிகாரம் இல்லை



# சவால்களுக்கு அஞ்சி சமாதான வழி முறையை கைவிடப் போவதில்லை

## கண்டியில் இடம் பெற்ற சமாதான விளக்கப் பேரணியில் பிரதமர் உரை

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வைத் தவிர வேறு பரிகாரம் இல்லை என்பதால் எத்தனை சவால்கள் எதிர் கொள்ளப்பட்டாலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கைவிடப் போவதில்லை.**

**திட்டமிட்ட திசையில் சமாதான வழி முறைகள் தொடர்ந்தும் நகர்த்தப்படும்.**

இவ்வாறு நேற்று முன்தினம் சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார நிலை குறித்து மக்களுக்கு விளக்கிக் கூறும் வகையில் கண்டியில் நடை பெற்ற பேரணியில் கலந்து கொணடு பேசிய போது பிரதமர் ரணில விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்தார்.

இவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் சமாதானத் தீர்வு எட்டப்படும் வரை நாம் ஓயப்போவதில்லை.எமது நாட்டிற்கு தேவையானது அதிகாரப் போராட்டம் அல்ல,அமைதிச் சூழலை தக்க வைத்துக் கொள்வது தான்.

சமாதான முயற்சிகளைச் சீர்குலைக்க எதிர்க்கட்சிகள் பெரிதும் முனைந்து வருகின்றன.இதனை முறியடிக்க அனைத்து மக்களும் ஒன்றுபட்டு முன்வர வேண்டும்.

சமாதான முயற்சிகளின் போது சிறுசிறு குறைபாடுகள் தோன்றத் தான் செய்யும்.இருதரப்பினரும் பேசித் தீர்க்கக் கூடிய சூழ்நிலை தற்போது தோன்றி இருப்பதால், அதனை நேரடியாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

இதன் பிரகாரம் கடந்த 10ம் திகதி திருகோணமலைக் கடலுக்கு அப்பால உள்ள சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட சம்பவம் குறித்தும் மற்றும் சமாதான முயற்சிகளின் போது,எழுந்துள்ள பல வேறு பிரச்சினைகள் குறித்தும் யப்பானில் நடை பெறும் ஆறாம் சுற்றுப் பேச்சில் விரிவாக ஆராயப் படும்.

அரசியல் ரீதியாக பிளவு படாமல நாட்டின் அபிவிருத்தி கருதி அனைவரும் ஒன்று பட்டு சமாதான முயறசிகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக் குடன் செயற்படாது அமைதிச் சூழலைக் கட்டிக் காப்பதற்கு அரசியல்வாதிகள் முன்வர வேண்டும்.

அத்துடன்,தற்போது எம்மால் முன் எடுக்கப்பட்டு வரும் சமாதான முயறசிகளின் பெறுபேற்றினை இன்னும் இரண்டு ஆண்டுகளில் தெளிவாகக் காணமுடியும் என்றார்.

சமாதான முயற்சியின் பயனாக உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்.இதனால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் அது மட்டும் அன்றி எதிர்வரும் யூன் மாதத்தில் பட்டதாரிகளுக்கான சுய தொழில் முயற்சித் திட்டங்கள் அறி முகப்படுத்தப்படவுள்ளன.

இளைஞர் செயலணித் திட்டத்தின் கீழ் பல ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவிருக்கின்றது என்றார்.

வளை குடா யுத்தம் பற்றிப்பேசிய ரணில் விக்கிரமசிங்கா,ஈராக்கின் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் போது அதனால் இலங்கைக்கு ஏற்படும் நெருக்கடிகளை சமாளிக்கத் தயாராகவுள்ளதாகக் கூறினார்.(உ-10,5)



---

### சமாதானப்..

பிரபாகரனுக்கு எடுத்து விளக்கிய பின்னர் அது தொடர்பான இறுதி முடிவை எடுக்கவுள்ளோம்.

இந்தப் பிரச்சினையை நேரடியாக உயர் மட்டத்திற்குக் கொண்டு சென்று ஆக்கபூர்வமான தீர்வைக் காணவேண்டும் எனவும் இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் நிகழா வண்ணம் உறுதிப்பாடுகளை-உத்தரவாதங்களை ஸ்ரீலங்கா அரசிடம் பெறவேண்டுமானால் அவர்களிடம் பேசியே தீர்வு காண வேண்டும் எனவும் ஹெல்கீஸன் ஆலோசனை வழங்கினார்.அவரின் இக் கருத்துக்களை தலைமைப்பீடத்திற்கு எடுத்துச் சென்று விளக்குவோம் தலைவரும் எம்மை பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைப்பார்என நான் கருதுகிறேன் என்று பாலசிங்கம் கூறினார்.

இச்சந்திப்புக்கு முன்னதாக கிளி. ஜெயந்திபுரத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களைப் பராமரிப்தற்கென அமைக்கப்படவுள்ள வெற்றிமனை உளவள துணை நிலையத்திற்கான அடிக்கல்லை ஹெல்கீஸன் நாட்டி வைத்தார்.(த)

---

### கப்பல்...

அவர்கள் கோரவில்லை.

---

### வடமராட்சி..

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் புரிந்துண்ர்வு உடன் படிக்கையை மீறும் செயல்கள் ஆகும். இந நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பிரிவினர் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். (இ)

---

### சண்டையை..

புரிந்துணர்வு உடன் படிக்கையை மதித்து வரும் புலிகளை மேலும் மேலும் சீண்டி வருவதுடன் தமது விருப்பத்தையும் பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கண்காணிப்புக் குழுவிடமும் அறிவிக்கப்பட்டுள்ளது.(இ)

---

## சுவிஸ் எம்.பி.க்களுடன் இன்று ஜயலத் குழுவினர் சந்திப்பு!

(புத்தளம்)

மனித உரிமை குறித்து ஆராய்வதற்காக இலங்கையில் இருந்து சுவிஸ்லாந்து சென்றுள்ள எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று சுவிஸ்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவுள்ளனர்.

இலங்கை நேரப்படி இரவு 9.30 மணியளவில் இச் சந்திப்பு இடம் பெறவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுத் தலைவரும் அமைச்சருமான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா சற்று முன்னர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

மனித உரிமை குறித்து பல்வேறு துறை சார்ந்தவர்களை சந்தித்ததாகத் தெரிவித்த பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆராய்ந்து பார்க்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதேவேளை,வட மாகாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து புத்தளத்தில் வசிக்கும் முஸ்லிம் குடும்பங்களின் அடிப்படை வசதிகள் உரிய முறையில் கிடைப்பதை உறுதி செய்ய ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான கிளைக் காரியாலயம் ஒன்றை புத்தளத்தில் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து வன்னி மாவட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர் ரிஹாத் பதியுதீன்,யு.என்.எச்.சி.ஆரின் பணிப்பாளர் நாயகம் லூட் ரொபேர்டிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று முதல் நான்கு தினங்களுக்கு சமஷ்டி முறை குறித்து





கொக்குவில் இந்துக் கல்லூரியின் மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடந்த போது கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைப்பதை முதற் படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் அதிபர் குணபாலசிங்கம் நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் திருமதி குணபாலசிங்கம், விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் உமாசுதன் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

ரிப்தற்கென அமைக்கப்படவுள்ள வெற்றிமனை உளவள துணை நிலையத்திற்கான அடிக்கல்லை ஹெல்கீஸன் நாட்டி வைத்தார்.(து)

**கப்பல்...**

அவர்கள் கோரவில்லை.

நாட்டின் இறைமைக்கு ஆபத்து ஏற்படும் போது இராணுவம்,கடற்படை, விமானப் படையினர் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.இந் நிலையில் கடற் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை யுத்த நிறுத்த மீறல் சம்பவமாகக் கருதக் கூடாது.

இலங்கைக் கடற்படையினர் விடு தலைப் புலிகளின் கப்பல் மீது நட த்திய தாக்குதலானது,நாட்டின் சட் டத்திற்கு அமைவாக நடத்தப் பட்ட ஒரு சம்பவமாகும் இலங்கையின் இறைமை மீது அச்சுறுத்தலை ஏற் படுத்தக் கூடிய இத்தகையதொரு அவசர காலச் சட்டத்தில் கடற் படை யினர் தாமாகவே முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர்.

கடற் போக்குவரத்துப் பாரம்பரி யங்களுக்கு ஏற்றவகையில் தாக்கு தலுக்குள்ளான விடுதலைப் புலி களின் கப்பல் பயணிக்கவில்லை. எந்த நாட்டின் கப்பல் என்று அடை யாளம் காணக்கூடிய வகையில் அந்த நாட்டுக்குரிய கொடி எதுவும் இக் கப்பலில் காணப்படவில்லை.இந் நிலையில தாக்குதலுக்கு இலக்கான கப்பல் வர்த்தகக் கப்பல் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது

என்று கூறிய அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புலிகளின் கப்பல் தாக் கப்பட்ட சம்பவம் ஆனது புரிந்துணர்வு உடன் படிக்கையை மீள் பரிசீலனை செய்ய வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தவில்லைஎன்று தெரிவித் தார். (உ)

குழுத் தலைவரும் அமைச்சருமான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா சற்று முன்னர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

மனித உரிமை குறித்து பல் வேறு துறை சார்ந்தவர்களை சந்தி த்ததாகத் தெரிவித்த பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுபபினர் டிலான் பெரேரா 2000ம ஆண்டு பொது ஜன ஐக்கிய முன் னணியால் பாராளுமன்றில் சமர்ப் பிக்கப்பட்ட தீர்வுப் பொதியில் தெரி விக்கப்பட்ட சமஷ்டி முறை குறித் தும்,ஆளும் ஐ.தே.முன்னணி டியதன் அவசியம் குறித்து வன்னி மாவட்ட ஸ்ரீ.ல.மு.காங்கிரசின் பாரா ளுமன்ற உறுப்பினர் ரிஹாத் பதி யுதீன்,யு.என்.எச்.சி.ஆரின் பணிப் பாளர் நாயகம் லூட் ரொபேர்டி டம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று முதல் நான்கு தினங் களுக்கு சமஷ்டி முறை குறித்து ஆராயவுள்ளதாக அமைச்சர் ஜயலத் மேலும் கூறினார்.

இக் குழுவினருடன் சென்ற ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக உடனடியாக நாடு திரும் பியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# மாபெரும் கிரிக்கெட் மோதல் இன்று கோலாகல ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் மாபெரும் மோதல் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி யாழ்.சென்.ஜோன்ஸ் கல் லூரி அணிகளுக்கிடையிலான 97வது மாபெரும் துடுப்பாட்டம் இன்று கோல கலமாக ஆரம்பமாகிறது.

முற்பகல் 9.30மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் போட்டி ஆரம்பமாகி பிற்பகல் 5.30 மணிவரை தொடர்ந்து இரு நாட்கள் இடம் பெறும்.

முன்னதாக காலை 9மணிக்கு சென்.ஜோன்ஸ் அணியினர் சென்றல் அணியினரால் பாண்ட் வாத்திய இசையுடன் மைதானத்திற்கு அழைத் வரப்பட்டு வீரர்கள் அறிமுகம் இடம் பெறும்.

போட்டிகளுக்குரிய பரிசுகளை அபாண்ஸ்,ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனிகள் வழங்கவுள்ளன.

யாழ்.கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்து படைக்கும் இப் போட்டி களைக் கண்டுகளிக்க கல்லூரிக ளின் பழைய மாணவர்கள் வெளி நாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். (இ)


**திருமறைக் கலாமன்ற**

அனுசரணையில்

**பிரித்தானியக் கழகம்** BRITISH COUNCIL

**பூஜா**

ஓராள் அரங்கு-ஆங்கிலம்

(தனி ஒரு பெண்ணின் அளிக்கை)

காலம்: 15.03.2003 சனிக்கிழமை (நாளை)

நேரம்: மாலை 6.30 மணி

இடம்: நாவலர் கலாசார மண்டபம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(C/5845)

**விற்பனைக்கு**

10 ஸ்ரீ 5735

வோக்ஸ்வகன் 1300 பச்சை நிறமுடைய கார் விற்பனைக்கு சனி-ஞாயிறு நாட்களில் பார்வையிடலாம .நியாயமான விலைகக்கு விற்கப்படும்.

சுவாமி சித்ரூபானந்தா,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

தொலை பேசி:070-212910

(C/5832)

**மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோவில் சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம்**

இராவணேஸ்வரனாலும் தம்பி விபீஷணச்
சக்கரவர்த்தியாலும் பிரதிஷ்டை செய்யப்பட்ட
நவகோடி சிவலிங்கங்களுள் ஒன்றான

மாவை கொல்லங்கலட்டி ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரசுவாமி திருக்கோவில் சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம் 19.03.2003 புதன் காலை 6.30-7.30 க்கு இடையில் நடை பெறும்.கும்பாபிஷேக முதல் நாள் 18.03.2003 செவ்வாய்க்கிழமை 2மணி வரை பக்தர்கள் எண்ணெய்காப்பு சாத்தலாம்.அன்று சுவர்ண பந்தனத்தை பார்வையிடலாம்.

காலை 6மணியில் இருந்து போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திருப்பணிக்கு நிதி உதவுக.

ஸ்ரீலஸ்ரீ.சு.சிவஷண்முகானந்தக்குருக்கள்
அறங்காவலர்

(C/5831)



இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.